# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 9 வெள்ளிக்கிழமை (24-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:295


# நோர்வே சமாதானக் குழு திடீரென இந்தியா விஜயம்!

## அந்நாட்டுத் தலைவர்களுக்கு தமது முயற்சி குறித்து விளக்கம்

புதுடில்லி,நவம்பர்24

**இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வே சமாதானக் குழுவினர் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இந்தியா போய்ச் சேர்ந்தனர்.**

**இலங்கைப் பிரச்சினை தொடர்பான தமது சமாதான முயற்சிகள் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு அவர்கள் விளக்கமளித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரேமண்ட் ஜோன்சென் உட்பட முக்கிய சில பிரமுகர்களைக் கொண்ட இந்தத் தூதுக்குழுவினர், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சிங் மற்றும் இந்தியத் தலைவர்களுடன் விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணைக் குழு அமைக்க முடிவு

கொழும்பு,நவ.24

பண்டாரவளைத் தடுப்பு முகாமில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சர்வதேச விசாரணையாளர்களைக் கொண்ட விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்படும் எனப் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

மறைந்த முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் மறைவு குறித்த அனுதாபப் பிரேரணையை

(12ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று கோரிக்கைகளை வலியுறுத்தி நாடாளுமன்றுக்கு மாட்டு வண்டிலில் செல்ல தமிழ் எம்.பிக்கள் திட்டம்!

கொழும்பு,நவ.24

வடக்குக்கான விமானக் கட்டணக் குறைப்பு மற்றும் எரிபொருள் விலைக்குறைப்பு உட்பட மூன்று கோரிக்கைகளை முன்வைத்து நாடாளுமன்றத்துக்கு மாட்டு வண்டிலில் செல்லும் போராட்டம் ஒன்றை நடத்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

* யாழ்.மாவட்டத்துக்கான விமானச்சேவைக்கு இருவழிக்கட்டணமாக 3 ஆயிரத்து 500 ரூபா அறவிடவேண்டும்.

* டீசல், மண்ணெண்ணெய், பெற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் நகரப் பகுதி மீது நேற்று ஷெல் தாக்குதல்!

### பள்ளிச் சிறுமிகள் இருவர் பலி! 10பேர் காயம்!!

திருகோணமலை,நவ.24

மூதூர் நகரப் பகுதி மீது நேற்றுக் காலை நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் பாடசாலை சிறுமிகள் இருவர் உயிரிழந்தனர்; மேலும் 10 மாணவர்கள் காயமடைந்தனர்.

மூதூர் புதிய உட்துறைமுக வீதியில் தபால் நிலையம், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் மற்றும் அல்மனார் முஸ்லிம் பாடசாலை ஆகியன அமைந்துள்ள பகுதியிலேயே இரு ஷெல்களும் வீழ்ந்து வெடித்துள்ளன.

அல்மனார் முஸ்லிம் பாடசாலை மாணவர்களான எம்.பி.சாஜா (வயது

(12ஆம் பக்கம் பார்க்க)

## அப்பாவித் தமிழ் மீனவர் நால்வர் திருகோணமலையில் சுட்டுக்கொலை!

### புலிகள் என நினைத்துக் கடற்படையினர் சுட்டனராம்

திருகோணமலை,நவ.24

திருகோணமலை கோபாலபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அப்பாவித் தமிழர்கள் நால்வர் உயிரிழந்தனர்; இருவர் காயமடைந்தனர்.

திருகோணமலை - புல்மோட்டை வீதியில் 11ஆவது மைல்கல் பகுதியில் கராச்சி என்ற கிராமத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இறால் பிடிப்பதற்காகச் சென்ற மீனவர்கள் மீது அப் பகுதியில் மறைந்திருந்த கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோதே இந்த நால்வரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கோபாலபுரத்தைச் சேர்ந்தவர்களான விஜயராஜா ஜெயக்காந்தன் (வயது 18), ஜீவானந்தம் பிரசாந்தன் (வயது 20), கோபாலபுரம் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவனான ஜேம்ஸ் ஜெயப்பிரதாப் (வயது 16), குடும்பஸ்தரான சின்னத்தம்பி விஜயகுமார் (வயது 21) ஆகிய நால்வருமே சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர். அப்பகுதியில் வீடு ஒன்றிலிருந்த விஜயநாதன் அருண்குமார் (வயது 4), தினேஷ்குமார் (வயது 17) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகப் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தையடுத்து கோபால

(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் முயற்சிக்கு முழு ஆதரவு: தீர்வுக்கு சகல வழியிலும் உதவ பிரிட்டன் தயாராக உள்ளது!

### அமைச்சர் ஹெய்ன் தெரிவிப்பு

கொழும்பு,நவ.24

இலங்கை குறித்து பிரிட்டன் அதிக அக்கறை கொண்டுள்ளது. அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்களை ஏற்படுத்துவதற்கு நோர்வே எடுக்கும் முயற்சிகளை நாம் முற்றாக ஆதரிக்கிறோம். இது விடயத்தில் தன்னால் இயன்ற சகல வழிகளிலும் உதவ பிரிட்டன் தயாராக உள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரிட்டிஷ் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் பீற்றர் ஹெய்ன்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜீ.சீ.ஈ. பெறுபேறு கொழும்பில் இன்று வெளியாகும்

கொழும்பு,நவ.24

கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகள் இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் வெளியாகும் என பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல முடிவுகள் பாடசாலைகளுக்கு அனுப்ப வைக்கப்படும் என்று அவர் மேலும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## உலக வங்கி அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,நவ.24

இலவச கல்வித் திட்டம் தொடர்பாக உலக வங்கி விதித்து வரும் நிபந்தனைகளைக் கண்டித்து கொழும்பு கொள்ளுப்பிட்டியில் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஜே.வி.பி. அமைப்பின் கீழ்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ஒரு விமான சேவை மட்டுமே!

யாழ்ப்பாணம்,நவ.24

பலாலி - இரத்மலானை விமான சேவையில் இன்று ஒரு சேவையே இடம்பெறும் என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை -

விமான சேவைக்கான பதிவு

(12ஆம் பக்கம் பார்க்க)

## கஸ்தூரியார் வீதி சூட்டுச் சம்பவம்: கான்ஸ்டபிளைக் கைதுசெய்து ஆஜர் செய்யுமாறு உத்தரவு!

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள ஹோட்டலுக்கு முன் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக, அவரைச் சுட்டதாகக் கருதப்படும் பொலீஸ் கான்ஸ்டபிளை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கடந்த திங்களன்று சம்பந்தப்பட்ட ஹோட்டலில் இருந்த இரு பொலீஸாரை இனந்தெரியாதோர் சுட்டுவிட்டு தப்பியோடியதும் -

(11ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் அமைச்சரை ஜனாதிபதி சந்திக்கவில்லை

கொழும்பு,நவ 24

இலங்கைக்கு வந்துள்ள பிரிட்டனின் வெளிவிவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் பீற்றர் ஹெய்னையும், திங்கட்கிழமை கொழும்பு வரவுள்ள தென்னாசிய விவகாரங்களுக்கான அமெரிக்கப் பிரதி அமைச்சர் காால் எவ்.இண்டர் பேர்த்தையும் சந்திக்க முடியாத நிலையில் ஜனாதிபதி சந்திரிகா இருப்பதாக ஜனாதிபதி அலுவலகம் இரு பிரமுகர்களுக்கும் அறிவித்திருப்பதாக அறியவருகின்றது.

இரு பிரமுகர்களினதும் இலங்கை விஜய காலத்தின் போது நாட்டில் ஜனாதிபதி இருக்கமாட்டார் என்பதால் சந்திப்புக்கு இயலாது இருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளதாம்.

வழக்கமாக விடுதலைப்புலிகளின் மாவீரர் வார காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா நாட்டில் இருப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## களஞ்சியப் பொறுப்பாளருக்கு யாழ்.நீதிமன்றம் பிணை வழங்கியது

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்ப்பாணம் குருநகர் அரச களஞ்சியப் பொறுப்பாளர் ஆர்.கதிர்காமநாதனை பிணையில் விடுவிப்பதற்கான அனுமதியை யாழ். மாஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று வழங்கியது.

இவரைப் பிணையில் விடுவிக்குமாறு வவுனியாவில் இயங்கும் வடமாகாணத்துக்கான அமர்வு மேல் நீதிமன்றம் விடுத்த பிணை அனுமதி உத்தரவை ஏற்று, நேற்று யாழ். மாஜிஸ்திரேட் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.

இருபத்தையாயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் -

தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான - இரு மேல்நிலை உத்தியோகத்தர்களினது - ஆள் பிணையிலும்-

(11ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி

அன்பர்களும், நிறுவனங்களும், பாடசாலைகளும், ஆலயங்களும், சமூக நிலையங்களுமாக நேற்று(23-11-2000) 'நிமலராஜன் குடும்ப நலன் காக்கும் நிதி'க்கு தமது அன்பளிப்புக்களை வழங்கியிருந்தனர். அவர்களின் விவரங்கள் நாளைய உதயனில் வெளிவரும்.

**நேற்றுவரை இந்நிதிக்குக் கிடைத்த மொத்தத் தொகை ரூ. 920,545**

# நல்லூர் பிரதேச சபை
## நல்லூர்/கொக்குவில் உப-அலுவலகங்கள்

### 01. ஆதனவரி அறிவித்தல் - 2001

1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல.15 இன் கழ் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக ஆதன வரி அறவீடு நல்லூர் உப - அலுவலக எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்குச் சென்ற வருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2001 ஆம் ஆண்டும் அறவீடு செய்யப்படவேண்டும் எனவும் கொக்குவில் உப-அலுவலக எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்கு மீளாய்வு செய்யப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2001ஆம் ஆண்டு அறவீடு செய்யப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டுக்கான ஆதன வரியை 31.01.2001 ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்கும் உரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியின் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் 15%மும் ஏனைய ஆதனங்களுக்கு 20%மும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்பட வேண்டும்.

எனவே தாங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை 31.01.2001 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக அந்தந்த அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு:-

(1) 2000 ஆம் ஆண்டு முடியவுள்ள வரி நிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 2001 ஆம் ஆண்டுக்கான வரி ஏற்றுக்கொள்ளப்படும்.

(2) சேதமடைந்தும், காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரி விலக்கின் பொருட்டான விண்ணப்பங்கள் 31.01.2001க்கு முன் கிடைக்கக் கூடியதாக இவ் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

(3) தற்போதைய கால சூழ்நிலை காரணமாக வருடாந்த வரி பற்றிய அறிவுறுத்தல் பத்திரங்கள் தாமதமானாலும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொண்டு தங்கள் வரிகளை உரிய காலத்தில் அலுவலகத்தில் செலுத்தி நிர்வாகத்துடன் ஒத்துழைக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

### 02. வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடங்கள், மதில், மலசுூடங்கள் என்பன கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகவே கட்டடங்கள், மதில், மலசுூடங்கள் என்பன கட்டுவதற்கும் பழையனவற்றைப் புதுப்பிப்பதற்கும் பிரதேசசபையில் இருந்து பெறப்படும் முறையான விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து நல்லூர் பிரதேச சபையின் முன் அங்கீகாரம் பெறுதல் வேண்டும். என்பதை இத்தால் அறியத் தருகின்றேன். முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நஷ்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும் என அறியத்தருகின்றேன்.

### 03. 2001ஆம் ஆண்டுக்கான வியாபார உரிமம்

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் தங்கள் வியாபார நிலையங்களுக்கான விண்ணப்பப் பத்திரத்தை நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகங்களில் பெற்று 31.12.2000 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்து காரியாலயங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் 2001ஆம் ஆண்டு பங்குனி 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிமக் கட்டணத்தைச் செலுத்தி வியாபார உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் படியும் கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2001 ஆம் திகதிக்கு பின்னர் வியாபார அனுமதிப் பத்திரமின்றி எதுவித வர்த்தக நிலையங்களும் அனுமதிக்கப்படமாட்டாது என அறியத் தருகின்றேன்.

க.மணிபல்லவராஜன்
*(ஜே.பி.யூ.எம்.)*
*தலைவர்,*
*நல்லூர் பிரதேச சபை.*

*நல்லூர் பிரதேச சபை,*
*திருநெல்வேலி.*
*22.11.2000.*

(C/13960)

---

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரைவுள்ளது

# அறிவித்தல்

## வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம்
## 16.12.2000ஆம் திகதி - சனிக்கிழமை

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 16.12.2000 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு சங்கத்தின் நடுவப் பணிமனைக் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என சங்கத்தின் சகல பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கும் அறியத்தரப்படுகிறது.

இக்கூட்டத்துக்கு ஏதாவது பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பினால், 07.12.2000ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கும்படியும், இடம்பெயர்ந்தோர் தமது தற்போதைய முகவரியை அறியத்தருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

*திரு.சி.வி.கந்தையா சிவஞானம்,*
*தலைவர்*

*திருமதி பு.நவரத்தினம்*
*செயலாளர்*

*127,காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*23.11.2000.*

(c/13958)

---

## யா/இராமநாதன் கல்லூரி
# நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் ~ 2000

காலம் : நாளை (25.11.2000) சனிக்கிழமை மு.ப.9.00மணி
இடம் : யா/இராமநாதன் கல்லூரி புதிய மண்டபம்
தலைவர் : கல்லூரி அதிபர்
திருமதி ஆ.சிவஞானசுந்தரம்

பிரதம விருந்தினர்:-
**திரு.சமாதிலிங்கம் சத்தியசீலன்**
(வரலாற்றுத்துறை, பேராசிரியர் யாழ். பல்கலைக்கழகம்)

ஆசியுரை:-
கலாநிதி செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார்**

நினைவுப்பேருரை:-
**திரு.தி.கமலநாதன்**
(பீடாதிபதி, தேசிய கல்வியற் கல்லூரி யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்:-
**திரு.அ.தற்பரானந்தன்**
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், உடுவில்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

*இராமநாதன் கல்லூரி,*
*சுன்னாகம்.*

*அதிபர், ஆசிரியர்கள்,*
*மாணவர்கள்,*
*கல்வி சாரா ஊழியர்கள்.*

### விளம்பர அன்பளிப்பு:

*கௌரி*
*தொலைத்தொடர்பு சேவை,*
*போட்டோப்பிரதி, லெமனேற்றிங்*
*இரவு பகல் சேவை*
*கே.கே.எஸ்.வீதி, மருதனார்மடம்*
*உள்ளூர் தொ.பே. பக்ஸ் } 070 212427*
*வெளியூர் தொ.பே. பக்ஸ் } 0094 070 212427*

*கிளை:-*
*கபிலன்*
*தொலைத்தொடர்புசேவை*
*இரவு பகல் சேவை*
*கே.கே.எஸ்.றோட்*
*றொட்டியாலடி*
*உள்ளூர் - 070 212718*
*வெளியூர் - 0094 070212718*

(80830)

---

# கண்ணீர் அஞ்சலி

இளைப்பாறிய கூட்டுறவுச் சங்கப்பரிசோதகரும்
எமது நண்பருமாகிய
**திரு.பொ.அருள்பிரதாசனின்**
அருமை மைந்தன்
## அ.முரளிதரன்

அவர்களின் அகால மறைவையிட்டு துயருறும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

*கூட்டுறவுத் திணைக்கள நண்பர்கள்,*
*யாழ்ப்பாணம்.*

(C/13959)

---

# நீங்காத நினைவலைகள்

**13ஆம் ஆண்டு** **ஐந்தாம் ஆண்டு**



**அமரர் நாகமணி சிவஞானம்**
அன்னை மடியில் - 30.05.1944
ஆண்டவன் அடியில் - 12.05.1987

**அமரர் சின்னக்குட்டி நாகமணி**
அன்னை மடியில் - 12.03.1918
ஆண்டவன் அடியில் - 21.11.1995

அன்போடு எங்களை அரவணைத்து பாசத்தின்
குல விளக்காய் காத்து வளர்த்த தந்தையே! மகனே!
ஒரு கூட்டு விளக்காய் ஒன்றி வாழ்ந்தோம்
காலன் உங்கள் உறவைப் பிரித்தான் ஆண்டுகள்
கடந்தாலும் இதயத்தில் வீற்றிருக்கும் உங்கள்
நினைவலைகள் எம்மைவிட்டு என்றும் அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் துயருறும்**

*மகன், அம்மா, சகோதரன்,*
*சகோதரிகள், மைத்துனர்கள்,*
*மைத்துனிகள், மருமக்கள்,*
*உற்றார், உறவினர்.*

*மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்,*
*உற்றார், உறவினர்*

தகவல்:
க.சண்முகராசா (மருமகன்)
புதுத்தோட்டம், தெல்லிப்பழை.

(80834)

---

## கிணறுகளுக்கு குளோரின் இடப்பட்டது

போயிட்டி வினோபாஜி சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் சனசமூக நிலைய சுற்றாடலில் அமைந்துள்ள குடிதண்ணீர் கிணறுகளுக்கு குளோரின் இடும் பணி அண்மையில் புத்தூர் சுகாதார உத்தியோகத்தர் தலைமையில் இடம்பெற்றது.

இப்பகுதியில் கட்டாக்காலிகளாகத் திரிந்த குட்டை நாய்களும் பிடித்து அழிக்கப்பட்டன. (ம-5)

## திருத்தப்படாத வீதி

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட நல்லூர் கொண்டலடி வீதி பல வருடங்களாக திருத்தப்படாமல் இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குண்டும் குழியுமாக உள்ள இந்த வீதியில் மழைக்காலங்களில் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று கூறப்பட்டது.(ம-10)

---

*புலமைப்பரிசில் பரீட்சை -2001*
15ஆவது பரீட்சையில்
அதிகூடிய புள்ளி பெற்றோர்

| | |
|---|---|
| கு.வஜிந்தன் | 169 |
| யா.இ.ஆ.பாடசாலை | |
| க.கோகுலன் | 165 |
| மகாஜனக்கல்லூரி | |
| உ.நிவேதிகா | 164 |
| இ.கதுஷா | 163 |
| கு.பௌசனா | 158 |
| சுண்டிக்குளி ம.கல்லூரி | |
| ஜெ.திரோஷன் | 158 |
| யா.இந்து ஆரம்பப் பாடசாலை | |

அடுத்த பரீட்சை
26.11.2000

**BOND**
யாழ்நகர்.

(80842)

---

**நாகம்ஸ்** சுன்னாகம்
அர்ஜுன்,ரோஜா,
ரம்பா,ஆனந்தராஜ்
நடித்த
**அடிமைச்சங்கிலி**
(தினஸ்) காட்சிகள் - 11.00, 2.30 (பு.தே.

(80877)

---

**ராஜா** யாழ்ப்பாணம்
விஜய், சிம்ரன்,
மணிவண்ணன்
மற்றும் பலரின் நடிப்பில்
இனிய பாடல்கள் கொண்ட
**நினைவிருக்கும் வரை**
காட்சிகள்:10.30, 2.00 (பு.தே.)

# உதயன்

## முழுப் பூசினியை சோற்றில் மறைக்க..

கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்தை மூடிவிட்டு அதிகாரிகள் தமது சொந்த நாட்டுக்குத் திரும்ப வேண்டும் என்று கோரி, ''சிஹல உறுமய'' ஆர்ப்பாட்டம் நடத்தியதை எவரும் மறந்திருக்க நியாயமில்லை.

அதே அமைப்பு — கட்சி — பிரிட்டிஷ் வெளியுறவு இராஜாங்க அமைச்சர் பீற்றர் ஹெய்னின் கொழும்பு விஜயத்தை ஆட்சேபித்தும் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறது.

அமெரிக்கா போன்ற வல்லரசு இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் கை தொட்டாலும் கூட, அதனையும் எதிர்த்தே தீருவது என்பது ''சிஹல உறுமய'' வின் கொள்கை என்று அக்கட்சியின் முக்கிய தலைவர் திலக் கருணரத்னா கூறியிருந்தார்.

இனப்பிரச்சினை உள்நாட்டு விவகாரம்; அதில் வெளியார் தலையிடக்கூடாது என்பதும் ''சிஹல உறுமய'' 'வின்வாதம். இனப்பிரச்சினை இலங்கையின் உள்நாட்டு விவகாரம் என்பதனை எவரும மறுப்பதற்கு இல்லை. ஆனால் அதில் சம்பந்தப்பட்டஇரண்டு தரப்பாரும், சிங்களவர்களும், தமிழர், முஸ்லிம்களும் பேசித் தீர்க்கக்கூடிய கட்டம் தாண்டிப்போய் விட்டது — சந்தர்ப்பங்கள் தவற விடப்பட்டன; நழுவிப் போயின. இதனைச் ''சிஹல உறுமய'' மறக்கக்கூடாது.

இப்போதைய பின்னணி என்ன? 1957 ஆம் ஆண்டு தொடக்கம் 1995 வரை இரண்டு தரப்புக்களையும் சேர்ந்த தலைவர்கள் பேசிப் பேசிக் காலம் கழிந்து போயிற்று; சலிப்பு உண்டாகி விட்டது. தமிழர்களுக்கு அவர்களின் நியாயமான — அவர்களுக்கே உரித்தான — உரிமைகளை வழங்குவதற்கு சிங்கள அரசியல் தலைவர்கள் விரும்பியதில்லை. ஆதிக்கம் தமது கையில் இருக்கும விதத்தில் சில சில்லறை உரிமைகளை — அரை குறைத்தீர்வுகளைத் திணிக்கவே விரும்பினார்கள்.

இத்தகைய பின்னணியிலேயே சிங்களத் தலைவர்கள் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்தனர். வெளியாரின் மத்தியஸ்தம் இல்லாத எந்தத் தீர்வு முயற்சியும் தமக்குத் திருப்தி தரும் பெறுபேறுகளைத் தரமாட்டா என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர்.

அந்த முடிவு சரியானதே என்பதனை இன்றைய தலைமுறைச் சிங்களத் தலைவர்களும் நிரூபித்து வருவதைக் காண்கிறோம். அவர்களில் திலக் கருணரத்னாவும் ஒருவரல்லவா?

அவ்வாறிருக்க —

எமது உள்நாட்டு விவகாரத்தை நாமே தீர்ப்போம். இந்த விடயத்தில் வெளியார் தலையிட்டு சிங்கள இனத்தையும் தமிழ் இனத்தையும் பிரிக்க வேண்டாம் என்று கூறுவது முழுப்பூசினிக்காயைச் சோற்றில் மறைக்க முயலும் முயற்சி மட்டுமன்றி, சிரிப்புக்கு இடமானதுமாகும்.

தென்னிலங்கையர்கள் — அவர்களின் தலைவர்கள் — தாம் இறுமான்மையினர் என்று கருதும் தமிழர்களின் சம உரிமைகளை மதிக்கவும் வழங்கவும் பின்னிற்கிறார்கள்; பென்னம் பெரிய பாறாங் கற்களாகத் தடைஇட்டு நிற்கின்றார்கள்.

ஆகையால் வெளியார் உதவி, அனுசரணை தானும் இல்லாமல் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய நிலை இப்போது அறவே இல்லை. ஆகையால் ''சிஹல உறுமய'' போன்றவற்றின் அர்த்தமற்ற வாதங்களும் நிலைப்பாடுகளும் மேலும் நாட்டை சீரழிக்கும். இதனை அவர்கள் உணர்வது எப்போது?

# விரதம் அனுட்டிக்க, வழிபாடு செய்ய சிறந்துவிளங்கும்கார்த்திகைத்திங்கள்

ஞான ஒளியேற்றி மாயை எனும் இருளை அகற்றும் தீபத்திருநாள் கார்த்திகை மாதத்திலேயே கொண்டாடப்படுவதனால் இம்மாதம் சிறப்புப் பெறுகிறது. இம் மாதத்தின் திருநாள்களும் விரதங்களும் பல.

கார்த்திகை என்றவுடன் நம் நினைவிற்கு வருவது திருக்கார்த்திகை – விளக்கீடு ஆகும். கார்த்திகை விரதம் என்பது கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரம் முதலாக மாதந்தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் முருகப் பெருமானைக்குறித்து அனுட்டிக்கும் விரதமாகும். இவற்றுள் கார்த்திகை மாதத்து விரதமே திருக்கார்த்திகை எனவும் விளக்கீடு எனவும் பெயர் பெறும்.

சிவராத்திரி நாளில் பிரம்ம விஷ்ணுக்களிற்கு இறைவன் தமது சோதிவடிவைக் காட்டிய பொழுது அவ்வடிவைத் தமக்கு என்றும் காட்டியருள வேண்டுமென அவர்கள் வேண்டினர். அதற்கு இறைவன் திருக்கார்த்திகை நாளில் மீண்டும் இவ்வுருவைக் காட்டுவோம் என்றார். இதன் நினைவாகவே திருக்கார்த்திகை கொண்டாடப்படுகிறது.

திருவண்ணாமலைத் தலத்தில் மலையுச்சியில் பெருந்தீபம் ஏற்றப்படுகிறது. இதனைப் பல ஊர்களிலுமுள்ள பல்லாயிரக்கணக்கானோர் இறைவனின் சோதி வடிவெனத் தரிசிப்பர். எம் ஆலயங்களில் நடைபெறும் சொக்கப்பானை உற்சவத்தைத் தரிசிப்பதன் மூலம் திருவெண்ணாமலைத் தீபத்தைத் தரிசித்த பேறடையலாம் என்பர்.

இத்தினத்தில் முருகனுக்கு விரதம் இருந்து தேன், தினைமா சேர்த்து மாவிளக்கு இட்டு பூசிப்பர். கார்த்திகை மாதத்தில் சர்வாலயதீபம் — விளக்கீடு இடம்பெறும். வீடுகளில் அழகிய கோலங்களைப் போட்டு அதன் மீது அகல் விளக்குகளை ஏற்றி வைப்பதுடன் சிறு, சிறு பந்தங்களையும் ஏற்றி வீட்டு வளவையும் மற்றும் இடங்களையும் ஒளியேற்றுவர்.

### சோமவார விரதம்

சோமவாரம் என்று சொல்லப்படும் திங்கட்கிழமை விரதம் கார்த்திகை மாத முதல் திங்கட்கிழமைகளில்அனுட்டிப்பதாகும். இது தொடர்ந்து 12 வருடங்கள் அல்லது 3 வருடங்கள் அல்லது ஒரு வருடம் அனுட்டிக்கப்பட வேண்டும். தொடர்ந்து திங்கட்கிழமை விரதம் அனுட்டிக்க முடியாதவர்கள் கார்த்திகை மாதத் திங்கட்கிழமைகளில் அனுட்டிக்கலாம. இவ்விரதத்திற்கு உபவாசம் இருந்து ஆசார சீலராக சிவனை வழிபட வேண்டும் என்பதே விதியாகும்.

ஆபத்துக்களிலிருந்து நம்மைக்காப்பாற்றவும், நம்முன்னோரை நரகத்திலிருந்து காப்பாற்றவும் இவ்விரதத்திற்கு சக்தி உண்டு. சந்திரன் பெயரால் கூறப்படும் வார விரதம் இதுவாகும். சந்திரன்

## ஞானக் கதிர்

தோன்றியது கார்த்திகை மாத வளர்பிறை அட்டமி சேர்ந்த ஒரு திங்கட்கிழமையிலேயே யாகும். (இம்முறை கார்த்திகை 3 ஆம் திங்கள் இவ்வாறு அமைகிறது) அவன் சிவனை ஆராதித்தது, சிரசில் அமர்த்தியது ஆகியனவும் இக் கார்த்திகைச் சோமவாரத்திலேயே நடந்தன.

வீட்டில் ஏகாதச உருத்திரர்களை 11 குடும்பங்களில் தாபித்து பூஜை செய்து, தம்பதி பூஜையும் முறைப்படி செய்வது சிறந்த பலனைத் தரும்.

### பக்தேஸ்வர விரதம்

பார்வதி தேவிக்கு பரமேஸ்வரனால் சொல்லப்பட்ட பக்தேஸ்வர விரதம் சிவ விரதங்களுள் ஒன்றாகும். மகப்பேறு இலலாத்தன்மை நீங்கி புத்திர சம்பத்தும், ஆயுள் ஆரோக்கியமும் கொடுக்கும் இவ்விரதம் பெண்களிற்குரியது. இது கார்த்திகை மாத பௌர்ணமி அன்று ஆரம்பித்து பௌர்ணமி தோறும் அனுட்டிக்கப்பட வேண்டும்.

மாலை நேரத்தில் சந்தனத்தால் சிவனையும், மஞ்சள் மாவினால் பார்வதியையும், மண்ணினால் நந்தியையும் செய்து வைத்து சங்கல்பபூர்வமாக ஆவாகனம் செய்து சகல உபசார பூஜைகளையும் செய்ய வேண்டும். பருப்பு, நெய், சர்க்கரை என்பன சேர்த்து மாவினால் செய்த அப்பமும், நெய், சர்க்கரை என்பன சேர்த்த தோசையும் நிவேதனம் செய்து மாவிளக்கேற்றி வைத்து முறைப்படி சுமங்கலிப்பூஜையும் செய்ய வேண்டும், இவ்வாறு முப்பத்து மூன்று பௌர்ணமிகள் விரதம் இருந்தபின் விரத உத்யாபனம செய்ய வேண்டும்.

வீரபத்திரரைக் குறித்து வழிபாடு செய்வோர் அவர் அவதரித்த தினமாகிய கார்த்திகை மாதத்து தேய்பிறை அட்டமியில் விரதமிருந்து வழிபாடியற்றுவர்.

### விநாயக சஷ்டி விரதம்

கார்த்திகை மாதத் தேய்பிறைப் பிரதமை முதல் 21 நாள்களிற்கு [மார்கழி சஷ்டியை] அனுட்டிக்கப்படுவது விநாயகசஷ்டி விரதமாகும். விநாயக விரதங்களுள் மிக முக்கியமான விரதமான இதன் பலன்கள் சொல்லற்கரியன. வேண்டுவார் வேண்டுவதைத் தருவதும் இவ்விரதமேயாகும்.

இவ்விரத முதல் நாளில் 21 இழையிலான காப்பினைக் கட்டி தினமும் இளநீர், மோதகம், அப்பம், எள்ளுருண்டை முதலாம் பலகார வகைகளையும் நிவேதனமிட்டு விசேட பூசை வழிபாடுகள் செய்து பெருங்கதை, விநாயக புராணம் முதலியவற்றைப் படித்தும் கேட்டும் விநாயககவசம், விநாயக ரகவல் முதலியவற்றைப் பாராயணம் செய்தும் விரதத்தை அனுட்டிக்க வேண்டும்.

ஒருவேளை மட்டும் உணவருந்தி 21 ஆம் நாள் உபவாசமிருந்து அடுத்த நாள் காலையில் காப்பைக் கழற்றி பாரணம் செய்தல் முறையாகும்.

இத்தனை சிறப்புப்பெற்ற கார்த்திகை மாதம் பிறந்திருக்கின்றது. விரதங்களை அனுட்டித்தும் குருபூசைத் தினங்களைக் கொண்டாடியும் உய்தி பெறுவோமாக. ✶

**கௌரி சுரேசன்**

## காரை ஒப்படைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள ஹொட்டேல் பகுதியில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த அ. முரளிதரனின் மோட்டார் கார் மற்றும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட உடைமைகளை அவரது தந்தையாரிடம் ஒப்படைக்குமாறு யாழ். நீதிவான் இ த. விக்னராஜா நேற்று உத்தரவிட்டார்.

மோட்டார் கார் அதனுள் இருந்த மூன்று மோதிரங்கள், 5 ஆயிரம் ரூபா பணம் ஏனைய ஆவணங்கள் போன்றவற்றையும் இறந்தவரின் தந்தையாரான பெரிய தம்பி அருட்பிரகாசத்திடம் ஒப்படைக்குமாறு யாழ். நீதிவான் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டார். [ஐ-5-6]

## சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 24

தொண்டமனாறு கடற்கரைப் பகுதியில் இருந்து அச்சுவேலிப் பொலிஸாரினால் மீட்கப்பட்டு நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட பெண்ணின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

இந்தச் சடலம் சிவன் வீதி, ஆவரங்காலைச் சேர்ந்த திருமதி கந்தப்பிள்ளை கனகம்மா (வயது 75) என்பவருடையது என்று அவரது மகளான திருமதி எஸ். மதன சற்குணராசா அடையாளம் காட்டினார்.

சித்தசுவாதீன மற்றவரான இவர் கடந்த 15 ஆம் திகதிக்குப் பின்னர் காணாமல்போய் விட்டதாகவும் இது தொடர்பாக அச்சுவேலிப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் இவரது மகள் நேற்று நடைபெற்ற மரண விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

யாழ். பதில் நீதிவான் சரோஜினி இளங்கோவின் முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் இறந்தவரின் மகளிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-5-6-173)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் செஞ்.சர்வதேசக்குழு உதவிப்பணி

கொழும்பு, நவ. 24

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த நான்கு நாளாகப் பெய்த மழை மற்றும் வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் உதவும் பணிகளை முழுவீச்சுடன் மேற்கொண்டு வருகின்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொழும்பு அலுவலகம் நேற்று முன்தினம் விடுத்துள்ளசெய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் உள்ள தரவைக் குளத்தில் உடைப்பு ஏற்பட்டதால் —வெள்ளத்தால் சூழப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட தாராவெளி, பிரம்படித்தீவு முருகன் தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களை இராணுவத்தின் விசேட அனுமதி பெற்றுச் சென்ற செஞ்சிலுவைத் தொண்டர்கள் படகுகள் மூலம் மீட்டு வந்தனர்.

மீட்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களும், குழந்தைகளும் ஆவர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நடமாடும் சுகாதாரக்குழுவினர் மீட்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்கினர்.

பின்னர் அவர்கள் செஞ்சிலுவைச் சங்க ஏற்பாட்டின் பேரில் பாடசாலை ஒன்றில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டு உணவு வழங்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் தொண்டர்களும் தொடர்ந்து வெள்ள நிலைமைகளைக் கண்காணித்து வருவதுடன் அம்பாறையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று உதவி வருகின்றனர். [ஒ]

### உதயவாக்கு

அதிகம் பேசுபவனுக்கும் பணக்காரருக்கும் குறைச்சலிருக்காது.

- சீனப்பழமொழி

## பாடசாலை நூலகங்களுக்கு நூலகர்களாக ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், நவ 24

பாடசாலை நூலகங்களுக்கு ஆசிரியர்களை நூலகர்களாக நியமனம் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நாட்டில் உள்ள 4 ஆயிரம் பாடசாலை நூலகங்களுக்கு நூலகர்களாக நியமிக்க தற்பொழுது பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்படுவோருக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பயிற்சியளிக்கப்பட்ட பின்னர் சேவைக்கு உள்வாங்கப்படுவர் என்றும் —

அத்துடன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் உள்ள தேசிய நூலக, தகவல் விஞ்ஞான நிலையத்தில் மேலதிக கற்றல் வாய்ப்புகளும் அளிக்கப்படும் என்றும் —

தெரிவிக்கப்பட்டது.

விண்ணப்பிக்கவுள்ளோர் 40 வயதுக்கு மேற்படாமல் இருப்பதுடன் 5 வருடங்கள் சேவையாற்றியிருக்க வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரியாகவும் இருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும் என்று கல்விச்சேவைகள் மேலதிக செயலாளர் எஸ் தில்லை நடராஜா கேட்டுள்ளார்.

மேலதிக விவரங்களை சகல கல்வி வலயங்களிலும் உள்ள விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

(ம-10-6)

## நாளை

கார்த்திகை 10

சனிக்கிழமை

திதி அமாவாசை பின் இரவு 5. 06 வரை.

நட்சத்திரம்: விசாகம் பி. ப. 4 . 43 வரை.

அமாவாசை விரதம்

சுபநேரம்: 03 12 04 42

ராகுகாலம் 09 12 10 42

பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வைத்திலிங்கம் இராசம்மா
(ஆத்தைப்பிள்ளை)

சுன்னாகம் ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த (பிரபல வர்த்தகர், சுன்னாகம்) வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவி இராசம்மா நேற்று (23-11-2000) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் வைத்திலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சிவமலர் (கொழும்பு), ஞானமலர், அருந்ததி, சந்திரமலர், சிவகுமாரி, பாலகௌரி (கனடா), பாலசரஸ்வதி, முருகதாசன், கண்ணதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மலிங்கம் (அமரர், முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), சின்னத்தம்பி (விற்பனைத்திணைக்களம்), தங்கராசா (காயத்திரி மில் உரிமையாளர், சுன்னாகம்), தேவராசா (ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி), ஸ்ரீவாதலிங்கம் (வருமான மேற்பார்வையாளர், வலி. கிழக்கு பிரதேச சபை), அரசரட்ணம் (கனடா), சந்திரகுமாரன் (சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்), வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று பிற்பகல் 3.000 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
வை. கண்ணதாசன் (மகன்)
வை. முருகதாசன் (மகன்)

சுன்னாகம் (80816)

## திருமதி சின்னத்துரை பொன்னம்மா

அல்லாரை வாசியும் தற்போது இந்தியாவில் வசித்தவருமாகிய திருமதி சின்னத்துரை பொன்னம்மா 21—11—2000 அன்று இந்தியாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் வ. சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சு. கமலாதேவி [கனடா], சி. துரைராசா [விவசாய போதனாசிரியர், விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம்], திருமதி சி. பாக்கியவதி [இந்தியா], சி. நித்தியானந்தர் [ஜேர்மனி], சி. இரவீந்திரன் [ஜேர்மனி], திருமதி இ. விமலாவதி [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இந்தியா அண்ணா நகரில் அன்னாரது இல்லமாகிய பிருந்தாவனத்தில் 22—11—2000 அன்று நடைபெற்றது.

இடப்பெயர்வு காரணமாக இந்த அறிவித்தலை தனிப்பட்ட முறையில் அறிவிக்க முடியாதுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் யாவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
சி. துரைராசா
(மகன்)
விவசாயப் போதனாசிரியர், அம்பன்
"மதுராந்தகம்",
அல்லாரை மீசாலை.

தற்காலிக முகவரி:
திரு. க. பாலசுப்பிரமணியம்
(சின்னராசா) மே. பா.
பருத்தியடைப்பு,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி. (80835)

## அருணாசலம் ஆறுமுகம்
(சமாதான நீதவான்)

மீசாலை வடக்கைப்பிறப்பிடமாகவும் சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சமாதான நீதவான் அருணாசலம் ஆறுமுகம் நேற்று (23—11—2000) வியாழனன்று காலமானார்.

அன்னார் சாவகச்சேரி ஆரம்ப பாடசாலை முன்னாள் உப அதிபரும், சாவகச்சேரி கிராமசபை முன்னாள் தலைவரும், சாவகச்சேரி ப.நோ.கூ. சங்க முன்னாள் இயக்குநர் சபை உறுப்பினரும், சாவகச்சேரி ஓய்வூதியர் சங்க முன்னாள் தலைவரும், இளைப்பாறிய ஆசிரியை கனகம்மா அவர்களது அன்புக் கணவரும், ஜெயபாலன் (சமாதான நீதிவான், யாழ்ப்பாண வீதி, அபிவிருத்தி அதிகார சபை ஒப்பந்தக்காரர்), ஜெயக்குமாரன் (யாழ்ப்பாணம் பனைப் பிரிவு வீதி, அபிவிருத்தி அதிகார சபை), ஜெயராணி, ஜெபதேவன் (ஜேர்மனி), ஜெயமணி (கனடா), ஜெயலட்சுமி, (ஜேர்மனி), ஜெயகாந்தன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மீனலோஜினி, பரமநாதன் (இலங்கை வங்கி சாவகச்சேரி), தவமலர் (அதிபர், கபபுதூ ஏகாம்பர வித்.), பவா (ஜேர்மனி), பத்மநாதன் (ஜேர்மனி), இந்திரகுமார் (கனடா), வாசுகி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், கீதா, நிசாந்தன், நிரஞ்சன், விஜிதா, நிலுஜா, அனுஷன், நிரோஜன், சோபிகா, வைஷ்ணா, செந்தூரன், ஜீவி, பவித், வாகீசன், மதுரா, சங்கீத, றொபின், சானகா, சர்மிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (23—11—2000) வியாழக்கிழமை கப்புதூவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
ஆ. ஜெயபாலன்
(மகன்)

நெல்லியடி. (80816)

# 215 தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், நவ. 24

பருத்தித்துறைக்கு நேற்று முன்தினம் வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பலில் வெளியூர்த் தபால்கள் அடங்கிய 215 பொதிகள் எடுத்துவரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 62 பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-6)

# சேர் பொன். இராமநாதன் நினைவு தினம்

கொழும்புத்துறை. நவ. 24

சேர் பொன் இராமநாதன் நினைவு தினம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது

இந்நிகழ்வு யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலைகள், இந்து இளைஞர் மன்றங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியனவற்றில் இடம்பெறும். (ம-30)

# திருட்டு!

யாழ்ப்பாணம், நவ. 24

கொக்குவில் மற்றும் கோண்டாவில் பகுதிகளில் கடந்த செவ்வாய் இரவு 4 திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

ஒரே இரவில் நடைபெற்ற இந்தத் துணிகரமான திருட்டுச் சம்பவங்களின் போது பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இரு கடைகள் மற்றும் வீடு, கோயில் என்பவற்றுள் ஊரடங்கு நேரத்தில் நடத்தப்பட்ட இந்தத் திருட்டுச் சம்பவங்களால் கொக்குவில், கோண்டாவில் பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். (ம-6)

# சமய சந்நிதிகளில்

வடமராட்சி, நவ. 24

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோயில் வருடாந்த அபிஷேக தினம் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. இதனை ஒட்டி விசேட அபிஷேகம், பூஜை என்பன இடம்பெறும். (ம-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 24

தாவடியில் பிரதான வீதியில் அமைந்துள்ள ஐயப்பன் ஆலயத்தில் கடந்த 16 ஆம் திகதி முதல் பிற்பகல் 6 30 மணிக்கு விசேட அபிஷேகமும் 108 நாம அர்ச்சனையும் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிகழ்வு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி வரை இடம்பெறவிருக்கின்றது. (இ-3)

★ ★ ★

கொழும்புத்துறை, நவ. 24

கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் தேவாலயத்தின் 25 ஆவது வெள்ளி விழா ஆண்டு திருவிழா நன்றித் திருப்பலி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (ம-30)

★ ★ ★

வடமராட்சி, நவ. 24

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயிலில் நாளை சனிக்கிழமை ஆண்டியப்பர் குருபூஜை நடைபெறும். (ம-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 24

பருத்தித்துறை பன்னையம்பதி ஸ்ரீ ராஜேஸ்வரி அம்மன் ஆலய கும்பாபிஷேகத் திருவிழா அடுத்த மாதம் 8 ஆம் திகதி நடைபெற உள்ளது. (ம-30)

# கண்ணீர் அஞ்சலி

வைத்திய கலாநிதி
க. பாலசுப்பிரமணியம்
அவர்களின் தந்தையார்

## பெரியதம்பி கந்தையா

அவர்கள் இறைபதம் அடைந்தமைக்கு எமது கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

கல்லூரிச் சமூகம்,
யா/இணுவில் மத்திய கல்லூரி,
இணுவில்.

(80839)

# கண்ணீர்ப் பூக்கள்

லயன் வைத்திய கலாநிதி
க. பாலசுப்பிரமணியம் அவர்களின்
அன்புத் தந்தை

## பெரியதம்பி கந்தையா

விருட்சமாய்க் கிளைபரப்பி
விதிப் புயலில் சிக்கிவிட்ட
பாலாவின் அன்புத் தந்தை
ஆத்மா சாந்தி அடைவதாக!

பாசச் சுமை படிந்து
பரிதவிக்கும் விழுதுகள்
விழிநீர் சொரிகையிலே
சோகச் சுமை தாங்க
கைகோத்து நிற்கின்றோம்.

லயன்ஸ் கழகம்,
இணுவில்.

[80832]

# கண்ணீர்ப் பூக்கள்

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற
யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர்
திரு. தி. சிவதட்சணாமூர்த்தி அவர்களின்
பாசமிகு மாமனார்

## ஆறுமுகம் சுப்பையா

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்,
யாழ். மாவட்ட அலுவலகம்.

(80833)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 – 07 – 1947



உதிர்வு 21 – 11 – 1995

திருமதி
## பாலசுப்பிரமணியம் விக்கினேஸ்வரி

திதி: 24–11–2000

பண்போடு அறிவூட்டிப் பாங்காய் வளர்த்தீர்
கண்போலக் கருத்துமே எமைக் காத்து நின்றீர்
மண்பொலியத்தெய்வமென மாண்புடனே வாழ்ந்தீர்
எண்ணமதில் என்றுமுமைப் பூஜித்து வாழ்வோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், மகள், மகன்,
மருமகன், மருமகள், பேரப்பிள்ளைகள்,
சகோதரிகள், சகோதரர்கள்,
மச்சான், மச்சான்மார், அண்ணன்,
பெறாமக்கள் மற்றும்
உற்றார், உறவினர்கள்.

தகவல்:
ஐ. பாலசுப்பிரமணியம்
ஆராய்ச்சியார் வளவு,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (80826)

# இளம் சந்ததியினரின் பிரச்சினைக்கு தீர்வு காணும் சுகாதாரத் திட்டம்

## யாழ்.மாநகரசபைப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம்,நவ.24

இளைஞர், யுவதிகள் மற்றும் கட்டிளமைப் பருவத்தினர் எதிர் நோக்கும் சுகாதாரப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணும் வகையில் வம்ச விருத்திச் சுகாதாரத் திட்டம் ஒன்று யாழ். மாநகர சபைப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப் படவிருக்கின்றது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்த ஐரோப்பிய ஒன்றியமும் ஐ.நாவின் சனத்தொகை நிதியமும் உதவ முன் வந்துள்ளன என்று யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.தெய்வேந்திரன் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் குறித்து விளக்கம் அளிக்கையில் அவர் கூறியதாவது:-

காலத்தின் தேவையாக அமையும் இந்த விடயம் தொடர்பாக தகவல் அறிவாற்றல், உளவளத் துணை, குடும்பநல சேவைகள் ஆகியன குறித்து விளக்க 24 பன்முகக் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. இந்தக் கருத்தரங்குகள் வண்ணார் பண்ணை பெரியபுலம் மகாவித்தியாலயம், நாவலர் கலாசார மண்டபம் ஆகியவற்றில் இடம்பெறும்.

இந்தக் கருத்தரங்குகளில் பாடசாலை இளைய தலைமுறை ஆசிரியர்கள், சமூகத் தலைவர்கள், உயர்தர வகுப்பு மாணவர்கள் ஆகியோர் பங்குபற்றுவர்.

இந்த விடயத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ சமகால வம்சவிருத்தி சுகாதாரப் பிரச்சினைகள்.

★ இளைஞர்கள், யுவதிகள் மற்றும் கட்டிளமைப் பருவத்தினரிடையே ஏற்படும் நோய்கள்.

★ மதுபானம், போதைவஸ்துகள், புகையிலை ஆகியவற்றால் ஏற்படும் விளைவுகளும், தடுப்பு முறைகளும்.

★ பாலியல் தொடர்பு நோய்கள் பற்றியும், குறிப்பாக எயிட்ஸ் நோயின் தோற்றுவாய், சுகாதார, சமூக, பொருளாதார விளைவுகளும் அவற்றைத் தடுக்கும் வழிவகைகளும்.

★ தற்போதைய சூழலில் உளவளத் துணையை எவ்வாறு சமூகத்தின் நன்மைக்குப் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கலாம்.

எம்மால் 24 நிகழ்ச்சிகள் நகரின் பல்வேறு பகுதிகளில் (அல்லது வேறு பகுதிகள் சமூக/கல்வி நிறுவனங்கள் விரும்பினால்) நடத்தப்படவுள்ளன. இந்த நிகழ்ச்சிகளை எம்முடன் ஒத்துழைத்து தமது பகுதிகளில் நடத்த விரும்புவோர் எமது சுகாதார போதனாசிரியருடனோ அல்லது எமது நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் திட்ட அலுவலருடனோ தொடர்பு கொண்டு ஒழுங்கு செய்யலாம்.

இத்திட்டம் மாநகராட்சி மன்ற சுகாதாரப் பகுதியுடன் இணைந்து வட மாகாண புற்றுநோய், எயிட்ஸ் தடுப்புச் சங்கம், ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா சனத்தொகை நிதியம், இலங்கைக் குடும்பத் திட்டச் சங்கம் ஆகியவற்றின் வளங்களை பயன்படுத்தி எமது மக்களின் நாளாந்த வாழ்வுக்கு உதவும் திட்டமாகும் - என்றுள்ளது. (இ-3)

### செயலமர்வுகள்

தென்மராட்சி,நவ.24

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்பு செயலமர்வுகள் நாளை சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் அடுத்தமாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

தரம் I ஏபி, Iசி பாடசாலைகளின் அதிபர், பிரதி அதிபர்கள் ஆகியோரும் தரம் II, தரம் III பாடசாலைகளின் அதிபர்களும் செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

* * *

தென்மராட்சி,நவ.24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 8 வகுப்புக்களின் ஆசிரியர்களுக்கான வாழ்க்கை தேர்ச்சி பற்றிய சேவைக் காலப் பயிற்சி செயலமர்வுகள் வலய அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நாளை சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் செயலமர்வுகள் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

### குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு வவுணதீவு இராணுவ முகாமுக்கு அருகில் இருந்து நேற்று முன்தினம் மாலை குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

படுவான்கரையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தங்கராசா என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்த செவ்வாயன்று மாலை 5 மணியளவில் மேற்படி நபர் மட்டக்களப்பு நகரில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற படுவான்கரை நோக்கிச் சென்றார் எனவும் -

பின்னர் வவுணதீவு இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள வயல் ஒன்றில் இருந்து அவரது சடலம் மீட்கப்பட்டது எனவும் -

உயிரிழந்தவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ம-7-21)

# அனர்த்தங்களில் இருந்து காக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்க!

## வடக்கு அரச அதிபர்களுக்கு டக்ளஸ் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.24

பருவமழை ஆரம்பித்திருப்பதை அடுத்து வெள்ளம் மற்றும் ஏனைய அனர்த்தங்களில் இருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்களுக்கான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாண அரசாங்க அதிபர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இது குறித்து அமைச்சு பத்திரிகைக் குறிப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடமாகாணத்தில் யுத்த அனர்த்தம் காரணமாக மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்து, இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழ்கின்றனர். அடிப்படை வசதிக்குறைகளுடன் வாழும் இவர்கள் பருவமழை ஆரம்பித்ததும் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளது. எனவே இவர்களது நலன்களைக் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

இதற்காக உணவு மருந்துக் கையிருப்புக்கள் உரிய அளவில் பேணப்பட வேண்டும். தேவையான முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்த நடவடிக்கைகளுக்கு வசதியாக மாவட்ட மட்டத்தில் அரச அதிபர் தலைமையில் பிரதேச செயலர்கள், கிராம சேவகர்கள் மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள் ஆகியோரைக் கொண்ட மாநாடு கூட்டப்பட வேண்டும் - என்றுள்ளது.(ம-7)



வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனை அபிவிருத்திச் சபையும் - வடமராட்சி லயன்ஸ் கழகமும் இணைந்து கண்பார்வையற்றவர்களுக்கு இலவசமாக, மூக்குக் கண்ணாடிகளை அன்பளிப்பாக வழங்கிய போது, பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு கண்ணாடி அணிவித்தபோது எடுக்கப்பட்ட படம். அருகில் வல்வெட்டித் துறை மாவட்ட மருத்துவ மனையின் மாவட்ட வைத்திய அதிகாரி கே.மயிலேறும்பெருமாளும் காணப்படுகின்றார்.

*(படம்:-நெல்லியடி செய்தியாளர்)*

### புயற் காற்றால் பாடசாலை கூரை தூக்கி வீசப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.24

கடந்த திங்களன்று தொண்டமனாறு பகுதியால் திடீரென வீசிய புயற் காற்று காரணமாக தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய கூரை ஓடுகள் தூக்கி வீசப்பட்டன.

பாடசாலைப் பிரார்த்தனை மண்டபம், இரண்டாம், மூன்றாம் மாடிக் கட்டடங்கள் ஆகியவற்றின் கூரை ஓடுகளும் மலசல கூட சிறு தூண்களும் தூக்கி வீசப்பட்டன. பாடசாலை வளாகத்தில் நின்ற பல மரங்களும் முறிந்து விழுந்தன. இதனால் பாடசாலைக்கு பல ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. (ம-5)

# அன்று நாவலர் கூறிய தேன்பொந்து இன்றைய திருக்கேதீஸ்வர ஆலயம்

## குருபூசை தின விழாவில் உரை

'தேன்பொந்து அகப்பட்டுள்ளது. சைவ அன்பர்களே அவ்விடத்தைத் தோண்டுங்கள்; பெருங்கோயிற் பொருள்கள் வெளிப்படும்' என நாவலர் அன்று விடுத்த அறைகூவலின் பிரதிபலிப்பே இன்றைய திருக்கேதீச்சரத் தலம் எழுவதற்கு வித்திட்டது. அவரது முயற்சியே அழிந்துபோன நகுலேஸ்வரம் மீளக்கட்டியெழுப்பக் காரணமாக இருந்தது.

இவ்வாறு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்ற ஆறுமுகநாவலர் குரு பூசை நிகழ்வில் சிறப்புரையாற்றிய செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் கூறினார்.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் ஆறுமுகநாவலர் குருபூசை நிகழ்வு நடைபெற்றது.

ஆறு.திருமுருகன் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

மன்னார் காட்டுப்பகுதியில் விவசாயிகள் கண்டெடுத்த சில விக்கிரகங்களை பிரித்தானிய ஆட்சியினிடம் ஒப்படைத்த செய்தியறிந்து பாடல் பெற்ற கேதீஸ்வரம் அமைந்திருந்த இடம்தான் அக்காடு என வெளிப் படுத்தி பிரசுரம் வெளியிட்டவர் நாவலரே.

யாழ்.மத்திய கல்லூரியில் மாணவனாகச் சேர்ந்த அவர் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் மிகுந்த புலமை கொண்டு விளங்கினார். அங்கே ஆசிரியராக இருந்த பேர்சிவல் பாதிரியார் நாவலரின் தோற்றத்தைக் கண்டு திகைத்ததுடன் அவரது அறிவைக்கண்டு அஞ்சினார். ஆசிரியரான பேர்சிவல் மாணவனாக இருந்த நாவலரிடம் ஒரு மாணவனாக இருந்து தமிழ் மொழியைக் கற்றார்.

நாவலருக்கு சிதம்பரத்தைத் தரிசிக்கவேண்டும் என்று ஆர்வம். பேர்சிவலுக்கோ கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்கு வசதியாக பைபிளைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என்ற விருப்பம். நாவலரின் ஆர்வத்தைப் பயன்படுத்தி தனது நோக்கத்தைப் பூர்த்தியாக்க விரும்பிய பேர்சிவல் அவரை இந்தியாவுக்கு அழைத்துச் சென்றதுடன் பைபிளை மொழி பெயர்க்கவும் செய்தார். மிகச்சிறந்த தமிழில் நாவலர் பைபிளை மொழி பெயர்த்தார்.

பைபிள் மொழிபெயர்ப்புடன் வந்த பேர்சிவல் அதை மக்களுக்கு இலவசமாக வழங்கி மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதைக் கண்ட நாவலர் தனது தவறை உணர்ந்து சைவத்தையும் தமிழையும் காக்கும் பணியில் தன்னைத் தீவிரமாக்கிக் கொண்டார்.

சைவப் பாடசாலைகளை நிறுவியும், மாணவர்களை பசி அணுகாமல் கற்பிக்க வேண்டும் என்பதற்காகக் கஞ்சித் தொட்டிகளை அமைத்தும், கிராமங்கள் தோறும் சமயப் பிரசாரங்களில் ஈடுபட்டும், அச்சகத்தை நிறுவி புராண ஏட்டுச் சுவடிகளை நூல் வடிவில் வெளியிட்டும், பிற சமயத்தவரின் கருத்துக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் மூலம் பதிலடி கொடுத்தும் இறுதிவரை சைவசமயத்தை அந்நியர்களிடம் இருந்து காப்பாற்றத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். இந்த மண்ணில் சைவமதம் நிலைத்து நிற்கிறது என்றால் அதற்கு நாவலர் ஆற்றிய பணிகளே காரணம்.

எமது மதத்தினதும் மொழியினதும் உயர்வுக்காக அவர் காட்டிய பாதை வலுவானது. அந்தப் பாதையில் ஒவ்வொருவரும் அடியெடுத்துச் செல்லவேண்டும். அப்போதுதான் இந்த மண் சிவபூமியாக, சைவப் பூமியாக விளங்கும் - என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தமது தலைமையுரையில் கூறியதாவது:-

நாவலரைச் சைவ உலகம் என்றும் நன்றியுடன் நினைத்து வணங்க வேண்டும். இன்றைய இக்கட்டான சூழலில் கூட பல்வேறு பகுதிகளிலும் நாவலர் எழுச்சி விழாக்கள் நடைபெற சைவப் பெருமக்கள் ஏற்பாடுகளை எடுத்திருப்பது பெருமைக்குரியது.

நாவலர் பெருமானை பேர்சிவல் பாதிரியார் 'குரு' என ஓரிடத்தில் விழித்துள்ளார். நாவலரது அறிவுப் புலமை ஆற்றல்களே அதற்குக் காரணம். நாவலரைப் பின்பற்றத்தக்க சேவையாளர்கள் நம்மிடையே உருவாகவேண்டும். அத்தகைய பண்பாளர்களால் தான் எமது சமயத்தையும் மொழியையும் எதிர்கால சந்ததிக்கு வழங்க முடியும்.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் பேச்சு, பண்ணிசை, கதாப் பிரசங்கம், நடனம் என்பனவும் இடம் பெற்றன. (ம-111)



சங்கானை காளி அம்பாள் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் சமீபத்தில் மரம் நடும் விழா நடைபெற்றது. இந்த வைபவத்தில் பிரதம அழைப்பாளராகக் கலந்து கொண்ட யாழ்.பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் அல்வாரோ வடில்லோ, வடமாகாண மின்சாரசபைப் பொறியியலாளர் கே.பத்மநாதன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம். ஆலய நிர்வாகி எஸ்.கோபாலகிருஸ்ணனும் (தேங்காயுடன்) காணப்படுகின்றனர். *(படம்:-சங்கானை செய்தியாளர்)*

## பயணிகளுக்கான பாதுகாப்பு அனுமதி:

# தீவுப்பகுதி மக்களுக்கு விசேடவசதி செய்து கொடுக்குமாறு கோரிக்கை

நெடுந்தீவு,நவ.24

வெளி மாவட்டங்களுக்குச் செல்ல விண்ணப்பித்துள்ள தீவுப் பகுதியைச் சேர்ந்த மக்கள், குறிப்பாக நெடுந்தீவு போன்ற போக்குவரத்துப் பிரச்சினைகள் உள்ள இடங்களில் உள்ள மக்கள் தமது பயண அனுமதி சம்பந்தமான விவரப்பட்டியலை தீவுப்பகுதி பிரதேச செயலகங்களில் பார்வையிட வசதி செய்யப்பட வேண்டும் எனத் தீவுப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெடுந்தீவில் இருந்து ஒருவர் தமக்குப் பயண அனுமதி கிடைத்துள்ளதா என்பதை அறிந்துகொள்ள யாழ். நகருக்கு வந்து செல்வதற்கு இரண்டு அல்லது மூன்று தினங்களை செலவிட வேண்டியுள்ளது.

தீவுப்பகுதி பிரதேச செயலகத்தில் பாதுகாப்பு அனுமதியைப் பார்வையிட ஏற்பாடுகள் செய்யும் பட்சத்தில் பொதுமக்களின் அலைச்சல் தவிர்க்கப்படும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

(ம-11)

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.**
**முழுநேரப் பட்டப்பின் கல்வித் தகைமைக் கற்கைநெறி 2000 / 2001**

## புதிய அனுமதி

தனியார் பாடசாலைகளில் கற்பிக்கும் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 2000. 11. 30 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 50/- செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பீடாதிபதி அலுவலகம், உயர் பட்டப் படிப்புகள் பீடத்தில் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளுக்கமையத் தெரிவுகள் இடம் பெறும்.

நேர்முகத் தேர்வு 2000. 12. 01 ஆம் திகதி பிற்பகல் 2. 30 மணிக்கு உயர்பட்டப் படிப்புகள் பீடச் சபையறையில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்குத் தோற்றும்போது பின்வரும் சான்றிதழ்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

1. பட்டத் தகைமைச் சான்றிதழ்.
2. பிறப்புச் சான்றிதழ்.
3. அதிபரின் சிபாரிசுக் கடிதம்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைப் 'பீடாதிபதி, உயர் பட்டப் படிப்புகள் பீடம்' என்னும் முகவரிக்கு 2000. 11. 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தத்தம் அதிபரூடாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

*பதிவாளர்,*
*யாழ்.பல்கலைக்கழகம்,*
*திருநெல்வேலி.* (C/13945)

# யாழ்ப்பாணத்தில் மேல்நீதிமன்றம் உடன் அமைக்கக் கோரிக்கை

## கைதிகளின் உறவினர்கள் மகஜர்

யாழ்ப்பாணத்தில் பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களை இங்கேயே விசாரணை செய்ய வசதியாக மேல் நீதிமன்றமொன்றை உடன் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரில் கடந்த புதனன்று நடத்திய ஊர்வலத்தை அடுத்து ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் மேற்கண்டவாறு கோரியுள்ளனர்.

யாழ்.அரச அதிபர் ஊடாக அனுப்பப்பட்டுள்ள அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்படுபவர்கள் தெற்கிலும், வவுனியாவிலும் உள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அங்குள்ள நீதிமன்றங்களிலேயே ஆஜர் செய்யப்படுகின்றனர்.

அவர்களைப் பார்வையிடுவதற்கோ அல்லது அவர்களின் விடுதலை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ பெரும் செலவு மற்றும் பாதுகாப்பு நெருக்கடிகளை பொதுமக்கள் எதிர்நோக்குகின்றனர்.

இந்த அவலநிலையில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்க யாழ்ப்பாணத்திலேயே விசாரணை நடத்தக்கூடியதாக மேல்நீதிமன்றம் ஒன்று இங்கு அமைக்கப்படவேண்டும் என்றுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் நீதி அமைச்சர், சட்டமா அதிபர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி, யாழ். மாவட்ட ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ம-3)

**கணனிச் சேவைகள்**

★ கணனியில் சகலவிதமான அச்சுவேலைகளைச் செய்வதற்கும்-
★ முக்கிய தகவல்களைப் பாதுகாப்பாகப் பதிந்து வைப்பதற்கும் -
★ பிரத்தியேக வகுப்புகளுக்கும்-

**ப.சிவானந்தசர்மா**
B.A.(HONS)
(கோப்பாய் சிவம்)
**கந்தசாமி கோயில் தெற்கு வீதி, இணுவில்.** (80739)

**Extra Mural Unit**
**University of Jaffna**
**English for Communication - (Advanced)**

**EMS Unit of the University of Jaffna** will commence the above course in January 2001. The duration of the course is three months.

Applications are invited from those, who have already followed the foundation course in English for Communication at our unit.

**OR**

Those who have followed the **NCE** course at the Technical College.

**OR**

Those who have followed the **NDE** course at the **ATI**.

Coruse fee: Rs.200/= (Two hundred rupees)
Send in your applications enclosing Bio-data on or before **15th December, 2000.**

To:
**The Co-ordinator,**
**EMS Unit,**
**University of Jaffna, Jaffna.** (C/13941)

# பண்டத்தரிப்புப் பகுதியில் நெருப்புக் காய்ச்சல் பரவுகிறது

## தடுப்பதற்கு நடவடிக்கை

சண்டிலிப்பாய்,நவ.24

பண்டத்தரிப்பு, சில்லாலை, சாந்தை, பிரான்பற்று ஆகிய பகுதிகளில் நெருப்புக் காய்ச்சல் நோய் தீவிரமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை இப் பகுதியில் ஆறு பேர் நெருப்புக் காய்ச்சல் நோயாளர்கள் என இனங் காணப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

நெருப்புக் காய்ச்சல் நோய் பற்றியும் அதற்கான தடுப்பு முறைகள் பற்றியும் விளக்கும் துண்டுப் பிரசுரம் ஒன்றை பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் பண்டத்தரிப்பு பொது சுகாதார பரிசோதகர் பொ.சிவரூபன் வெளியிட்டுள்ளார். இத் துண்டுப்பிரசுரம் சகலருக்கும் வழங்கப்பட்டு வருகின்றது.

நெருப்புக் காய்ச்சல் போன்ற குடலுடன் சம்பந்தப்பட்ட நோய்களை நிரந்தரமாகத் தடுப்பதற்கு ஒரே வழி எல்லோரும் மலகூடம் பாவிப்பதே என்றும் - அதில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-135)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



## செல்வன் விதுர்ஷன்

*சிவதாஸ்(ஈசன்) - சர்மிளாவதி(செல்வி)*

தம்பதிகளின்

**செல்வப் புதல்வன் விதுர்ஷன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (24-11-2000) வெள்ளிக்கிழமை கோப்பாய் மத்தி, லேடன் பண்ணை ஒழுங்கையிலுள்ள அன்னை இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, பூட்டன், பூட்டிமார், அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பாமார், அப்பம்மாமார், மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், சித்தப்பாமார் அனைவரும் ஆண்டவனருளால் பல கலையும் கற்று சான்றோனெனப் பெயர் பெற்று பல்லாண்டு காலம் சீரோடும் சிறப்போடும் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

**தகவல்:- க.இராஜகோபால்.**
**(அம்மப்பா)**

*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.* (80707)

# நல்லூர் பிரதேச சபை - திருநெல்வேலி

# மீள் கேள்வி அறிவித்தல் - 2001

கேள்விப்பத்திர விநியோகம் *28-11-2000 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை.* கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதியும் நேரமும் *29-11-2000 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை.* கேள்வி திறக்கும் திகதியும் நேரமும் *29-11-2000 ஆம் திகதி பிற்பகல் 3. 00 மணி.* கோண்டாவில் பலாலி வீதி, ஆட்டிறைச்சிக்கடை, கோயில் தோட்டம் மாட்டிறைச்சிக்கடை ஆகியவற்றிற்கு விண்ணப்பிப்பவர்கள் தாங்களாகவே இடத்தைத் தெரிவுசெய்து கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட காணி உரிமையாளரின் சம்மதக் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும். கோண்டாவில் பலாலி வீதி, ஆட்டிறைச்சிக்கடைக்கான இடம் கோண்டாவில் சந்திக்கும் டிப்போவுக்கும் இடையில் இருத்தல் வேண்டும். மேலதிக விவரங்களை நல்லூர், பிரதேச சபை காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

| இறைச்சிக் கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த தொகை |
|---|---|---|---|
| நல்லூர் உப - அலுவலகம் | | | |
| 01. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல. 1 | 350/- | 3,000/- | 45,150/- |
| கொக்குவில் உப - அலுவலகம் | | | |
| 01. கொக்குவில் உப - அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 40,000/- |
| 02. கோண்டாவில் பலாலி வீதி, ஆட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 58,800 |
| 03. கோயில் தோட்டம் மாட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 15,000/- |

**க.மணிபல்லவராஜன்,**
**(ஜே.பி.யு.எம்.)**
**தலைவர்,**
**நல்லூர் பிரதேச சபை.**

*நல்லூர் பிரதேச சபை,*
*திருநெல்வேலி.*
*15.11.2000.* (C/13940)

மூண்டெழுந் துயர் சுமக்கும்......

# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண் மகிழ 22 - 12 - 1981



கண் நெகிழ 24 - 11 - 1998

## செல்வி தர்ஷிகா செல்வரத்தினம்

(மாணவி - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்)

ஓ.. எங்கள் இனிய நிலவே!
உன் தண்ணொளி இழந்து - இருள் சூழ்ந்து
இன்று இரண்டாண்டு முடிந்ததுவோ.......?
நீ படுத்த கட்டில்...... நீ படித்த கதிரை........ மேசை........
நீ அணைத்த புத்தகங்கள்.......
நீ அமர்ந்த சின்ன அறை...... ஐயகோ!
அவையெல்லாம் அங்காங்கே... அப்படியே இருக்க.....
எம் உயிரே...... நீ மட்டும்......
அப்பாவைத் தேடி அவ்வுலகம் பறந்தனையோ?
உன் நினைவுகள் இதயத்தை நெருட.....
ஆத்ம சாந்திக்காய் அஞ்சலித்து நிற்கும்

**உன் அன்பு**
**அம்மா,**
**சகோதரர்கள்.**

*ஷோபிதாஸ் ஸ்ரோர்ஸ்,*
*ஆவரங்கால்.* (80750)

# பொதுமக்களைப் பாதிக்கக் கூடிய தாக்குதல்களை மேற்கொள்ளாதீர்!

## புலிகளிடம் ஈ.பி.டி.பி. அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.24

அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படுத்தக் கூடிய தாக்குதல்களைப் புலிகள் முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்று ஈ.பி.டி.பி. கோரியுள்ளது.

அந்த அமைப்பு நேற்றுமுன் தினம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இப்படிக் கேட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொதுமக்கள் செறிவாகக் குடியிருக்கும் பகுதிகளுக்குள் ஊடுருவி நிற்கும் புலிகள் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான தாக்குதல்களால் பொதுமக்கள் பெரும் துன்பங்களுக்கு உள்ளாகின்றனர். இது வன்மையான கண்டனத்துக்கு உரியதாகும்.

கடந்த வாரத்தில் யாழ்பாணக் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இத்தகைய தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. ஆனைக்கோட்டைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டு வீச்சுச் சம்பவத்தில் பத்து வயதுப் பாலகனான அன்ரன் நிக்ஷன் உடல் சிதறி மரணம் அடைந்துள்ளார். அத்துடன் இச்சம்பவத்தில் பிரஜைகள் குழுவின் செயலாளர் துரைராசா மற்றும் வே. துரைசிங்கம், திருமதி ஞானேஸ்வரி இராசதுரை ஆகியோர் படுகாயம் அடைந்துள்ளனர். இதேபோல் யாழ்ப்பாண நகரிலுள்ள தேநீர்ச்சாலைக்குள் வைத்துப் பொலீஸாரின் மீது புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதல்களின் விளைவாக அருள்பிரசாதன் முரளிதரன் என்னும் அப்பாவி இளைஞன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். அத்துடன் நல்லூர் கோயில் வீதியில் வயோதிப மாது ஒருவர் கைக்குண்டு வீச்சுக்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளார்.

பொது மக்களின் பாதுகாப்புக்கு-நலன்களுக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் இத்தகைய தாக்குதல்களின் மூலமாக படையினரைத் தூண்டி விடும் எண்ணம் இருப்பதாகவே புலப்படுகிறது. படையினரின் பதில் தாக்குதல்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை பிரசாரப் பொருளாக்கும் கபடத்தனம் இந்தத் தாக்குதல்களின் உள்நோக்கமாக இருக்கலாம்.

கடந்த கால உயிரிழப்புகளை நினைவு கூரும் மாவீரர் வாரத்தின் போது இத்தகைய அவலமான - அநியாயமான இரத்தம் சிந்துதல்கள் பொது மக்களுக்கு எத்தகைய பயனைப் பெற்றுக்கொடுக்கப் போகின்றன என்பது உரத்த சிந்தனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஆத்திரமூட்டும் சம்பவங்களும் அதன் பின் விளைவுகளும் அப்பாவிப் பொது மக்களை நிம்மதியற்ற நிலைமைக்கு இட்டுச் செல்கின்றன என்பது உணரப்பட வேண்டும்.

இத்தகைய சம்பவங்களின் மூலமாகப் பொதுமக்கள் மத்தியில் 'விடுதலை' உணர்வு மேலோங்குவதற்குப் பதிலாக தப்பித்து ஓடத் தூண்டும் மனப்பாங்கே வளர்கின்றது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

எனவே தான் அப்பாவிப் பொது மக்களின் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படுத்தக்கூடிய தாக்குதல்களைப் புலிகள் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம். பொது மக்களின் இயல்பு வாழ்வில் உண்மையான அக்கறையுடைய ஒவ்வொருவரும் இத்தகைய அநியாய இழப்புக்களைத் தடுக்கும் வகையில் செயற்பட முன்வர வேண்டும் எனவும் விரும்புகிறோம் - என்றுள்ளது.

# நாய்களுக்கு தடுப்பூசி

வலிகாமம்தெற்கு,நவ.24

உடுவில் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கான ஏ.ஆர்.வி.தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

தடுப்பூசி வழங்கப்பட உள்ள இடங்களில் தவறாது வீட்டு நாய்களை கொண்டு சென்று தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

தடுப்பூசி போடப்படவுள்ள காலம், இடம், நேர விவரங்கள் வருமாறு:-

24ஆம் திகதி வெள்ளிக்கிழமை:- பிற்பகல் 1 மணி: மல்வம் முருகமூர்த்தி கோயிலடி.

பிற்பகல் 2.30மணி: லவ்லேன் ரியூட்டறி.

25 ஆம் திகதி சனிக்கிழமை - காலை 9.00 மணி: உடுவில் உபதபாலக சந்தி.

காலை 10.30 மணி: உடுவில் மத்திய மருந்தகம்.

27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை - காலை 9 மணி: தோரணக்கட்டை ஆரம்பசுகாதார நிலையம்.

காலை 10.30 மணி: சங்குவேலி பிள்ளையார் கோயிலடி.

பிற்பகல் 1.00 மணி: சங்குவேலி தெற்கு சனசமூக நிலையம்.

பிற்பகல் 2.30 மணி:வெட்டுக்கட்டை பிள்ளையார் கோயிலடி.

(ம-152)

# யாழ்.பிரதம தபாலகத்துக்கு நவீன வசதிகளுள்ள கட்டடம்

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ். பிரதம தபாலகத்துக்கென நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்ட நிர்மாணப் பணிகளுக்கென ரூபா 80 லட்சம் வழங்கப்பட்டுள்ளதாகவும்-

கட்டடத் திணைக்களம் இந்த வேலைகளை உடன் ஆரம்பிக்க இருப்பதாகவும்-

- வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி கட்டடத் தொகுதியை அமைப்பதற்கெனத் தபால் திணைக்களம் 8 கோடி ரூபாவை ஏற்கனவே ஒதுக்கீடு செய்துள்ளமை தெரிந்ததே.

(இ-7)

# உயிலங்குளம் பகுதியில் மோதல்

வவனியா,நவ.24

மன்னார் - உயிலங்குளம் சோதனைச்சாவடிக்கு அண்மையில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் படையினர் தரப்பில் 3 பேர் காயமடைந்தனர் எனவும் -

விடுதலைப்புலிகள் தரப்பில் 3 பேர் உயிரிழந்தனர் எனவும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

கடந்த செவ்வாயன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்த படையினர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-7)

# மாவீரர் வாரத்தையொட்டி படையினர் ரோந்து அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.24

மாவீரர் வாரத்தையொட்டி யாழ். மாவட்டத்தில் தேடுதல்களும், ரோந்தும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ரோந்து வரும் படையினர் சந்தேகத்துக்குரிய இளம் வயதினரை நடு வீதியில் வைத்து உடற்பரிசோதனைக்கு உள்ளாக்குவதுடன் அவர்களது உடைமைகளையும் நுணுக்கமாகச் சோதனை செய்கின்றனர்.

நகரத்தை அண்டிய பகுதிகளிலும் தேடுதல்கள் அடிக்கடி இடம் பெறுகின்றன.

சோதனை நிலையங்களிலும் படையினரின் சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

படையினரின் ரோந்து பகலில் மட்டுமல்லாது இரவு நேரங்களிலும் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

# வல்வை நகர சபையின் மரம் நடும் இயக்கம்

யாழ்ப்பாணம்,நவ.24

வல்வெட்டித்துறை நகரசபையினால் அமைக்கப்பட்டுவரும் விளையாட்டரங்குப் பகுதியில் மரம் நடும் இயக்கம் கடந்த செவ்வாயன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நகரசபையின் தலைவர் எம். கே.சிவாஜிலிங்கம் மரங்களை நட்டு இந்த இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார்.

தேக்கு, மலைவேம்பு போன்ற பயன்தருமரங்கள் அங்கு நடப்பட்டு வருகின்றன.

அதே சமயம்-யாழ்.ரயில் நிலையத்தின் சுற்றாடல் பகுதியை சிரமதானம் மூலம் சுத்திகரிக்கும் பணியை கடந்த இரு தினங்களாக ரெலொ அமைப்பின் உறுப்பினர்கள் மேற்கொண்டுள்ளனர்.

(இ-3)

## இராணுவச் சாரதிகளுக்கு தண்டம்

வலி,வடக்கு,நவ.24

விபத்து ஏற்படுத்திய இரு இராணுவச் சாரதிகளுக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் தர்மப்பணம் செலுத்தும்படி உத்தரவிட்டது.

அச்சுவேலி இராணுவ முகாமைச் சேர்ந்த சாரதி சரத் பிரேமரத்ன விஜயவர்த்தன என்பவருக்கு தெல்லிப்பழை மாவட்ட வைத்திய சாலையில் அமைந்துள்ள உளநலச் சங்கத்திற்கு ஆயிரத்தி 500 ரூபா தர்மப்பணம் செலுத்தும்படியும் -

ஏ.ஆர்.எம்.ஜெயசிறி என்ற சாரதிக்கு உளநலச் சங்கத்திற்கு ஆயிரம் ரூபா செலுத்தும்படியும் பணிக்கப்பட்டுள்ளது.

(ம-86)

## கருத்தரங்கு

தென்மராட்சி,நவ,24

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 8 வகுப்புகளில் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கான வாழ்க்கைத்தேர்ச்சி பாடசேவைக் காலப் பயிற்சிக் கருத்தரங்குகள் நாளை சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மருதனார்மடம் இராமநாதன் மகா வித்தியாலயத்திலும் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ம-117)

## வணிகமாணி பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைப் பிரிவினரால் நடத்தப்படும் வணிகமாணி பகுதி I பரீட்சைகள் டிசெம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகி 11 ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் அனைவரும் தமது அனுமதி அட்டைகளையும் நேர அட்டவணையையும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

(ம-6)

## தென்னையிலிருந்து விழுந்து காயம்

யாழ்ப்பாணம்,நவ.24

கொக்குவில் பகுதியில் தேங்காய் பிடுங்கத் தென்னையில் ஏறியவர் தவறுண்டு விழுந்து படுகாயமடைந்தார்.

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியைச் சேர்ந்த நாகமுத்து குணரத்தினம்(வயது-42) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-6,5-ப)



# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி

குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

குறிப்பு:- இந்நிதிக்குப் பணம் சேகரிப்பதாகக் கூறி சில மோசடியாளர்கள் படிவங்களைத் தயாரித்து பொதுமக்களிடம் நன்கொடை கேட்டுச் செல்வதாக அறியவந்துள்ளது. இது விடயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**22.11.2000 வரை கிடைத்த நிதி:-**

| | | ரூபா |
|---|---|---|
| | முன்கொண்டுவரப்பட்டது | - 826,919 |
| 1. | இலங்கை வங்கி ஊழியர் சங்கம் யாழ். மாவட்டம் | - 62,300 |
| 2. | வினோபா சனசமூக நிலையம், கச்சாய் தெற்கு, கொடிகாமம் | - 500 |
| 3. | வா. ஜெயரட்ணம், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை | - 550 |
| 4. | ஓர் அன்பர் காந்தி வீதி, வல்வெட்டித்துறை | - 200 |
| 5. | ஓர் அன்பர், வேம்படி ஒழுங்கை, வல்வெட்டித்துறை | - 200 |
| 6. | அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை | - 10,660 |
| 7. | ஓர் அன்பர், உரும்பிராய் | - 500 |
| 8. | க. நந்திகா, பிரதேச செயலகம், பருத்தித்துறை | - 55 |
| 9. | யாழ். கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை | - 4,660 |
| 10. | ஓர் அன்பர், 82/7, பருத்தித்துறை வீதி, யாழ். | - 200 |
| 11. | ஓர் அன்பர், உடுவில் தெற்கு | - 200 |
| 12. | ஓர் அன்பர், தொல்புரம் | - 200 |
| 13. | ஓர் அன்பர், கோண்டாவில் மேற்கு | - 200 |
| 14. | ஓர் அன்பர், மீசாலை. | - 200 |
| 15. | ஊழியர்கள், இலங்கை வங்கி, சுன்னாகம் | - 6,100 |
| 16. | அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஐடியல் கல்வி நிலையம், நீர்வேலி | - 1800 |
| | மொத்தம் | 915,444 |

# கைதான ரெலோ உறுப்பினர்கள் 13 பேரும் தடுப்புக் காவலில்!

வவுனியா,நவ.24

வவுனியா செட்டிகுளம் பகுதியில் அமைந்துள்ள ரெலோ அமைப்பின் முகாமில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை காலை கைது செய்யப்பட்ட 13 பேரும் நேற்றுமுன் தினம் மாலை 7 மணியளவில் செட்டிகுளம் பொலீஸாரால் வவுனியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியனின் வீட்டில் ஆஜர் செய்யப்பட்டனர்.

படையினரால் கைதுசெய்யப்பட்டு செட்டிகுளம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பிரஸ்தாப நபர்கள் 13 பேரும் 3 கிரனேட்டுகள், 19 ரி-56 ரக துப்பாக்கிக்கான ரவைகள், மூன்று மகஸீன்கள் என்பவற்றை வைத்திருந்தனர் என்றும்-

1966 ஆம் ஆண்டு வெடிபொருள்கள் சட்டத்தின்கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும்- செட்டிகுளம் பொலீஸார் சார்பில் ஆஜரான பொலீஸ் சார்ஜன்ட் தெரிவித்தார்.

நீதிவான் வீட்டில் ஆஜர் செய்யப்பட்டபடியால் கைதிகளை பிணையில் விடுவிக்க முடியாது என்பதைத் தெரிவித்த எம்.இளஞ்செழியன்-விடுதலை கோரினால் கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யும்படி தெரிவித்தார்.

எதிர்வரும் 5ஆம் திகதிவரை கைதிகளைத் தடுப்புக்காவலில் வைக்குமாறு செட்டிகுளம் பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

(இ-8)

# வெள்ளத்தினால் காட்டுப் பன்றிகள் கிராமங்களுக்குள் படையெடுப்பு

## மட்டக்களப்பில் 13 பேர் காயம்

மட்டக்களப்பு,நவ.24

மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலை,சித்தாண்டிப் பகுதிகளில் காட்டுப்பன்றிகளின் தாக்குதலுக்கு இலக்காகி 13 பேர் படுகாயமடைந்த நிலையில் ஏறாவூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் அண்மையில் பெய்த பெருமழையால், காட்டிலுள்ள பன்றிகள் கிராமங்களுக்குள் வருகின்றன. அவை பொதுமக்களைக் கண்டால் துரத்திச் சென்று தாக்குகின்றன. பன்றிகளின் இந்தத் தாக்குதலால் மட்டக்களப்பில் சித்தாண்டி, மொறக்கொட்டாஞ்சேனை வந்தாறுமூலைப் பிரதேசங்களில் அச்சம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ-8-2)

## கிபிர் தாக்குதல்

மட்டக்களப்பு,நவ.24

மட்டக்களப்பில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இல்லாத புலி பாய்ந்த கல் பகுதிகளில் நேற்று முன்தினம் பிற்பகல் 'கிபிர்' விமானங்கள் தாக்குதல் நடத்தின என்று தெரிவிக்கப்பட்டது. சேத விவரங்கள் தெரிய வரவில்லை.

(இ-8)

## பயணிகள் சிரமம்

நெடுந்தீவு,நவ.24

யாழ்ப்பாணம் - குறிகாட்டுவான் பாதையில் போதிய பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாததால் பிரயாணிகள் பெரும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

நெடுந்தீவு, நயினாதீவு பயணிகளுடன் தினமும் நயினாதீவு நாகபூசணி அம்மன்கோவிலுக்குச் சென்று திரும்பும் பக்தர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதால் பயணிகள் மிகுந்த நெரிசலின் மத்தியிலேயே தமது பஸ்பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

(ம-111)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

கைதடி தெற்கு, கைதடி எனும் முகவரியைச் சேர்ந்தவர்களான முருகன் தெய்வானை என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 645422165V), விசேட அடையாள அட்டையும் மற்றும் சிவராசா உதயன என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 091001754) என்பன சுன்னாகம் சந்தைக்கும் தபால் கந்தோருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கைதடி பல நோ.கூ. சங்கம், இணுவில் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (80755)

11, மத்திய கிழக்கு வீதி, குருநகரைச் சேர்ந்த ஜெயராசா ஆன் மேரி என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 0901006242) கோப்பாய், இலங்கை பெந்தேகோஸ்தே சபையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இலங்கை பெந்தேகோஸ்தே, மானிப்பாய் அல்லது கோப்பாய் சபைகளில் கொடுத்து உதவவும். (80792)

கோகிலாக்கண்டி, கைதடி எனும் முகவரியுடைய இராசதுரை இந்திரகுமார் என்பவருடைய தேசிய அ.அ. (இல.761534017x), விசேட அ.அ. (இல. 091021091) என்பன 21.11.2000 அன்று மிட்டாஸ்கடைச் சந்திக் கடை அருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இந்திரன் படமாடம் இல.47, மிட்டாஸ் கடைச்சந்தி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (80784)

14, அரசடிலேன், அரியாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த மிதிலா கனகசிங்கம் என்பவரது தேசிய அ.அ. (இல.776311952V), விசேட அடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள அட்டை (இல. 97-A-SPI-286) என்பன பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவும். (80801)

## விற்பனைக்கு

**YAMAHA V.90 T** விற்பனைக்குண்டு. 'சரஸ்வதி வாசா', சின்னப் பிள்ளையார் கோயிலடி, வி.எம். றோட், பருத்தித்துறை. (80786)

**KONICA COPY MACHINE, NATIONAL** குளிர்சாதனப் பெட்டி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: அ.அருள்ராஜன் இல.111/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (80802)

குறுகிய காலத்தில் காய்க்கக் கூடிய தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு. உடன் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: **S.M.** சுப்பிரமணியம் (பீற்றூட் மணியம்) நிதியம் பனை, பல்லாகம். (c/13754)

## தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள கொமினிகேசனுக்கு ஆள் தேவை. யாழ் நகரில் வசிக்கும் 20 வயதுக்குட்பட்ட ஒருவர் பொருத்தமானது. விளம்பர இல. 1144, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (80787)

## இலகு திருமண சேவை

1962 **Engineering Final U.K,** 1967 **Engineering** கனடா, 1971 **B.Sc.** ஆசிரியர் சைவம், 1972 **Co-Operative Inspector, CIMA** 1965 **Engineer** இவர்களுக்கு மணப்பெண்கள் தேவை. மார்கழி, தை மாதங்களில் திருமண சேவை இயங்காது என்பதை அறியத்தருகின்றேன். துரை விமலா, **K.K.S.** வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (80824)

## பிரத்தியேக வகுப்புகள்

**A/L** தமிழ், இந்து நாகரிகம் மற்றும் உயர்தர வகுப்புகளுக்கான சமஸ்கிருதம் சிறப்பாகக் கற்பிக்கப்படும். ப.சிவானந்தசர்மா **B.A. (Hons)** (கோப்பாய் சிவம்), கந்தசாமி கோயில் தெற்கு வீதி, இணுவில். (80740)

## திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகலவித கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ்கன் ஆகியன திருத்திக் கொடுக்கப்படும். சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி (மேல் மாடி - கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (தவிர்க்க முடியாத காரணத்தால் திருத்த வேலை சில தினங்களாக நடைபெறவில்லை.) (80785)

## இலக்கியக் கட்டுரைகள்

நாடகம் எழுதும் போட்டிகளில் ஐந்து முறை முதலாம் பரிசு பெற்ற அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல். 10-11ஆம் தரங்களில் தமிழ் இலக்கியம் கற்கவும், கற்பிக்கவும் உதவக்கூடிய 38 கட்டுரைகள். (80820)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள **'Marshall & Rose' Piano,** குளிர்சாதனப் பெட்டி, தையல் மெசின் உட்பட பல வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு.தொடர்பு: பழைய பிள்ளைகள் இல்லம், சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். தொடர்புகொள்ளக் கூடிய நாள்கள்: செவ்வாய், வெள்ளி, சனி மாலை நேரங்களில். (80823)

## யாழ்.வலயத்தில் சங்கீத நடன ஆசிரியர் நியமனம்

யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளுக்கு சங்கீத, நடன ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின்கீழ் 3பேர் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

செல்வி.எஸ்.சந்தியா(நடனம்-யாழ். இந்து மகளிர் கல்லூரி)

கே.பி.கனகாம்பரி(சங்கீதம் - பெரியபுலம் ம.வி.)

ரி.நந்தினி(சங்கீதம்-வேம்படி மகளிர் கல்லூரி)

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-10)

# பிறந்தநாள் வாழ்த்து

## சடையன் தேவதாசன் [கிளி]

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், யாழ்ப்பாணக் கல்லூரி )

சடையன் தேவதாசன் தனது 60 ஆவது பிறந்தநாளை இன்று (24.11.2000) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை மனைவி அருளம்மா, மகன்மார்களான அலோசியஸ், லோறன்ஸ், மகள்மார்களான வசந்தாதேவி புவனேஸ்வரன், அற்புதமலர் ஜோர்ஜ், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சீரும் சிறப்புடனும் இன்னும் பலகாலம் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்:
தே. லோறன்ஸ் (மகன்)

*அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.* (80822)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது தீவகத்தின் அபிவிருத்தியில் அக்கறை கொண்ட

**கௌரவ**

**கே.என். டக்ளஸ் தேவானந்தா**

வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சராகப் பொறுப்பேற்றதையிட்டு கௌரவ அமைச்சர் அவர்களைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்ச்சியடைகின்றோம்.

**தலைவர்,**
**உறுப்பினர்கள், செயலாளர்,**
**பணியாளர்கள்.**

*பிரதேச சபை,*
*நெடுந்தீவு.* (c/13956)

## ஊர்காவற்றுறை
## உதவி அரசாங்க அதிபர் பணிமனை
## பிரசித்த ஏல விற்பனை அறிவித்தல்

ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டு வழக்கு இல. 131 இன் படி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய வளவில் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்ட பொருள்கள் நீதிமன்றக் கட்டளையின்படி 2000.12.12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் வைத்து என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| | | |
|---|---|---|
| அலுமினியம் | - | 1314 கிலோ கிராம் |
| செப்பு | - | 25 கிலோ கிராம் |
| பித்தளை | - | 1234 கிலோ கிராம் |

மேற்படி பொருள்கள் சேதமடைந்த நிலையிலுள்ள பாத்திரங்கள் முதலியனவாகும். பொலிஸ் நிலைய வளாகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இவற்றைப் பொறுப்பதிகாரியின் அனுமதியுடன் பார்வையிடலாம்.

சித்திரை விலை கோருபவர் உடனே முழுத்தொகையையும் பணமாகச் செலுத்தி உடைமையாக்கியவுடன் அன்றைய தினமே பொருள்களை அகற்றுதல் வேண்டும்.

**ஜே.எக்ஸ். செல்வநாயகம்,**
*உதவி அரசாங்க அதிபர்,*
*தீவகம் வடக்கு,*
*ஊர்காவற்றுறை.*

(C/13953)

# வாழ்த்துகின்றோம்

யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் அதிபர்

**செல்வி பா. மார்க்கண்டு** அவர்கள்

அதிபர் தரம் I அடைந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அத்துடன் இப்பாடசாலையில் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

குமரகோட்ட மக்கள் சார்பாக,
இ.இரத்தினதாசன், ந.சிவராசா,
இ.தங்கவேல், செ.தர்மலிங்கம்,
இ.கணேசதாஸ், க.தளையசிங்கம்.

கோண்டாவில். (80829)

# கண்ணீர்ப் பூக்கள்



**அமரர் அருணாசலம் ஆறுமுகம் (J.P)**

(முன்னாள் உபஅதிபர் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆரம்ப பாடசாலை.)

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


**யாழ்ப்பாண மின்னகம்,**
**மகாநதி புடவை அகம்,**
**சங்கம் புடவை அகம்.**
(உரிமையாளர், ஊழியர்கள்.)

*யாழ்ப்பாணம்.* (c/13957)

# பெருமையுடன் வாழ்த்தும் புலோலி மேற்கு விவசாயிகள்



**உயர்திரு. கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**



**உயர்திரு. சின்னையா நடராஜலிங்கம்**

எங்கள் அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய **உயர்திரு. க. பாலசுப்பிரமணியம்** அவர்கள் இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்று தலைமை அலுவலகத்திற்குச் செல்வதையிட்டும், தற்போது பருத்தித்துறை இலங்கை வங்கியின் முகாமையாளரான **உயர்திரு சி. நடராஜலிங்கம்** அவர்கள் சிரேஷ்ட முகாமையாளராக (Area Manager) பதவி உயர்வு பெற்றமையையிட்டும் புலோலி மேற்கு விவசாயிகள் சங்கத்தினராகிய நாம் அவர்களை வாழ்த்திப் பாராட்டுவதில் அகமகிழ்கின்றோம்.

இவ்விரு உயர் அதிகாரிகளும் எமது புலோலி மேற்கு விவசாயிகளுக்குச் செய்த அளப்பரிய சேவைகளை இத்தருணம் நினைவு கூர்ந்து எம் இதய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**புலோலி மேற்கு விவசாயிகள்,**
**சங்க நிர்வாகத்தினரும், அங்கத்தவர்களும்.**

(80831)

# இஸ்ரேலியர் - பலஸ்தீனர் இடையே பழிக்குப்பழி வாங்கும் தாக்குதல்கள்!

டெல்அவிவ், நவ. 24

வட இஸ்ரேலிய நகரான ஹெடேராவில் கார் ஒன்றில் மறைந்து வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் 2 யூதர்கள் கொல்லப்பட்டனர் 36 பேர் காயம் அடைந்தனர்.

இந்தச் சம்பவம் நடந்த சில மணி நேரங்கள் கழித்து காஸா பிரதேசத்தில் உள்ள மோரா நகர் அருகே இரு வாகனங்களில் வந்த பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேலிய கவச வாகனங்கள் கனரக ஆயுதங்களால் சுட்டதில் 5 பேர் இறந்தனர்.

இரு வாகனங்களும் சல்லடையாகத் துளைக்கப்பட்டுள்ளன. குண்டு வெடிப்புக்குப் பழிவாங்கவே அப்பாவிப் பலஸ்தீனர்களை இஸ்ரேல் படையினர் சுட்டுக் கொன்றதாக பலஸ்தீனர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். வாகனங்களில் வந்தவர்கள் தம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக இஸ்ரேலிய இராணுவத்தினர் கூறியுள்ளனர்.

இதற்கிடையில், பலஸ்தீன மக்களை இஸ்ரேல் அத்துமீறி ஒடுக்குவதாகக்கூறி எகிபது தனது தூதரை இஸ்ரேலிருந்து திருப்பி வர வழைத்துக்கொண்டுள்ளது அமைதி முயற்சியில் ஆக்கபூர்வமான பணியாற்றும் என்று நம்பியிருந்த எகிப்தின் நடவடிக்கை வருத்தமளிப்பதாக இஸ்ரேலியப்பிரதமர் எகுட் பராக் கூறியுள்ளார்.

அரபு நாடுகளுக்குள் இஸ்ரேலுடன்இராஜதந்திர உறவுகளை கொண்டிருந்த எகிப்திருந்து தமது தூதரை அழைக்கப் போவதில்லை என்றும் பராக் தெரிவித்துள்ளார்.

கடந்த 8 வார காலமாக இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையேயான மோதல்களில் உயிரிழந்தவரின் எண்ணிக்கை 250க்கும் மேல் உயர்ந்துள்ளது. (ஒ-8)

## உலக அரங்கில்

# மேற்குக்கரை மோதலைத் தடுக்க கோபி அனான் தீவிர முயற்சி

நியூயோர்க், நவ·24

மேற்குக் கரை மற்றும் காஸா நிலப்பரப்பில் இஸ்ரேலியப்படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே நடந்து வரும் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகளில் ஐ நாவின் செயலாளர் நாயகம் கோபி அனான் தீவிரமாக இறங்கியுள்ளார்.

சமாதான நடவடிக்கைகளில் முதல் கட்டமாக, கோபி அனான் ஐ. நா. சபை மண்டபத்தில் இஸ்ரேலிய, பலஸ்தீனத் தரப்புகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இருதரப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சர்வதேசக் கண்காணிப்புக் குழு ஒன்றை எவ்வாறு அமைக்கலாம் என்று அப்போது ஆராயப்பட்டதாகவும், இந்தச் சந்திப்பின் போது இருதரப்பினரும் பரஸ்பரம் ஒருவரைஒருவர் குற்றஞ் சாட்டிக் கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. (ஒ—8)

# அதிஉயர்ந்த 'எவரெஸ்ட்' மலை ஆண்டு தோறும் நகர்கிறது!

## சீன நிபுணர்கள் கண்டுபிடிப்பு

பெய்ஜிங், நவ. 24

உலகில் அதி உயர்ந்த மலையான 'எவரெஸ்ட்' வருடந்தோறும் நகர்ந்து வருவதாக சீன ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

செயற்கைக் கோள்களைப் பயன்படுத்தி மேற்கொண்ட ஆய்வுகளில் எவரெஸ்ட் சிகரம் ஒவ்வொரு வருடமும் வடகிழக்குத் திசையை நோக்கி 6 முதல் 7 சென்ரி மீற்றர் வரை நகர்வதாகச் சீன நிபுணர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் கடந்த 30 வருடங்களாக எவரெஸ்டில் உள்ள பனிப்படிவம் குறைந்து வருவதால் அது சுருங்குவதாகவும் உலகம் வெப்பமடைந்து வருவதாலேயே இப்படி நிகழ்வதாகவும் ஆராய்ச்சியாளர்கள் மேலும் தெரிவித்தனர். (ஒ-8)

# பெருநாட்டு நாடாளுமன்றம் அதிபரைப் பதவியகற்றியது

விமா, நவ. 24

தென் அமெரிக்க நாடான பெருவில் அதிபர் அல்பட்டோ பிஜிமோரி அறநெறி அற்றவர் என்று கூறிய அந்த நாட்டு நாடாளுமன்றம் அவரை பதவியகற்றியுள்ளது.

ஜப்பானின் டோக்கியோ நகரில் ஓர் ஆடம்பரவிடுதி ஒன்றில் தங்கியுள்ள பிஜிமோரி, 'பக்ஸ்' மூலம் அனுப்பிய பதவி விலகல் கடிதத்தை நாடாளுமன்றம் நிராகரித்து விட்டது.

அடுத்த ஆண்டு ஏப்ரலில் தேர்தல் நடக்கும்வரை வாலண்டின் பனிகுவா என்பவர் இடைக்கால அதிபராகப் பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீண்டகாலமாக பெருவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவி வகித்த பிஜிமோரி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தலை நடத்தாமல் தொடர்ந்து பதவியில் இருந்தார். இறுதியில் எதிர்க்கட்சிகளின் நிர்ப்பந்தத்தால் தேர்தலை நடத்திய அவர் மோசடிகளை மேற்கொண்டு மீண்டும் அதிபரானதாகவும் ஊழலும், மனித உரிமை மீறல்களும் அதிகரித்து விட்டதாகவும் குற்றச்சாட்டுக்கள் கிளப்பியதை அடுத்து கடந்த வாரம்முதல் நாட்டை விட்டு வெளியேறிய பிஜிமோரி ஜப்பானில் தங்கியுள்ளார். அவருக்கு 1 வருடம் வரை ஜப்பானிய விசா வழங்கப்பட்டுள்ளது. (ஒ-8)

# காஷ்மீர் நெடுஞ்சாலையில் 5 லொறிச் சாரதிகள் படுகொலை!

காஷ்மீரின், ஜம்மு—ஸ்ரீநகர் நெடுஞ்சாலையில் சென்ற கனரக வாகனங்களை நிறுத்திய தீவிரவாதிகள் அவற்றின் சாரதிகளில் இஸ்லாமியர்களை அனுப்பிவிட்டு, மற்றவர்களை வரிசையாக நிற்க வைத்துச் சுட்டதில் 5 பேர் இறந்தனர். 6 பேர் காயங்களுடன் உயிர் தப்பினர்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தீவிரவாதிகள் இராணுவச் சீருடை அணிந்திருந்ததாக உயிர் தப்பியவர்கள் தெரிவித்தனர்.

கனரக வாகனங்களில் ஏற்றி வந்த பொருள்களில் தமக்குத் தேவையானவற்றை மட்டும் பிரித்தெடுத்த தீவிரவாதிகள் அவற்றைத் தமது இடத்துக்குக் கொண்டு சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

இந்திய அரசு தற்காலிக தாக்குதல் நிறுத்தம் மேற்கொள்ள முன் வந்தபின்னர் நடந்த முதலாவது தீவிரவாதச் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது

இந்தக் கோரக் கொலைகளைக் கண்டித்து காஷ்மீரில் நேற்று மாநிலம் தழுவிய கடையடைப்பு மற்றும் ஹர்த்தால் நடத்தப்பட்டது. (ஒ-8)

## பாக் - ஈரான் மீது அமெரிக்கா தடை

வாஷிங்ரன், நவ. 24

சீனாவிடம் இருந்து ஏவுகணை தொடர்புடைய சாதனங்களை இறக்குமதி செய்த பாகிஸ்தான் மற்றும் ஈரானுக்கு பாதுகாப்புத்துறை சம்பந்தப்பட்ட அனைத்து ஏற்றுமதிகளுக்கும் அமெரிக்க அரசு அடுத்த இரு வருடங்களுக்குத் தடை விதித்துள்ளது. (ஒ)

# வியட்நாம் போரில் இறந்தவர்களது சடலங்களைத் தேடும் பணிகளை கிளின்ரன் நேரில் பார்வையிட்டார்

ஹோசிமின்சிற்றி, நவ. 24

வியட்நாமுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் 30 வருடங்களின் முன்னர் யுத்தத்தின் போது காணாமற் போன அமெரிக்கப்படை வீரர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளைப் பார்வையிட்டார்.

1967 ஆம் ஆண்டு வியட்நாம் கொரில்லாக்களினால் சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க விமானத்தின் விமானியான கப்டன் லோரன்ஸ் எவேர்டனின் உடலை புதைகுளியைத் தோண்டிக் கண்டுபிடிக்கும் பணியை நேரில் பார்வையிட்ட கிளின்ரன் உணர்ச்சி வசப்பட்டவராக இருந்ததாகக் கூறப்படுகிறது.

1960 - 70 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அமெரிக்க வியட்நாம் போரின் போது வியட்கொங் கொரில்லாக்களால் கொல்லப்பட்டு வியட்நாமில் புதைக்கப்பட்ட அமெரிக்க வீரர்களின் சடலங்களைக் கண்டு பிடித்து எடுத்து அவற்றை அமெரிக்காவில் புதைக்கும் பணிகள் நீண்ட காலமாக நடந்து வருகின்றன.

இதே போல் அமெரிக்கர்களால் புதைக்கப்பட்ட வியட்நாமியர்களின் புதைகுளிகளும் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இதில் அமெரிக்க வியட்நாமிய படைவீரர்கள் இணைந்து பணியாற்றி வருகின்றனர்.

வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்கா அடைந்த தோல்வி இன்றும் அமெரிக்கர்களுக்கு மாறாத வடுவாக இருப்பதால் தமது வீரர்களின் சடலங்கள் வியட்நாமிய மண்ணிலிருந்து மீட்கப்பட்டு அமெரிக்கா எடுத்துவரப்பட வேண்டும் என அமெரிக்கர்கள் விரும்புவது முன்னர் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளில் இருந்து தெரிய வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஒ—8—6)

## அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தல்

# குடியரசுக் கட்சி மேன்முறையீடு

வாஷிங்ரன், நவ. 24

அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தலின்போது புளோரிடா மாகாணத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளின் மொத்த எண்ணிக்கையில், ஆள்கள் மூலம் நடத்தப்பட்ட மறு எண்ணிக்கையின் முடிவுகளைச் சேர்ப்பதற்குத் தடை விதிக்கும் படிகோரி நாட்டின் மிக உயர்ந்த சட்ட அமைப்பான அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் புஷ்ஷின் குடியரசுக் கட்சிச் சட்டத்தரணிகள் மேன்முறையீடு செய்துள்ளனர்.

அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் நாட்டின் அதிகாரப் பதவிக்கான தேர்தல் தொடர்பாக வாதப் பிரதிவாதங்கள் நடப்பது இதுவே முதல் தடவை.

புளோரிடா மாகாணத்தில் ஆள்கள் மூலம் எண்ணப்பட்ட மறு எண்ணிக்கையை இறுதி முடிவில் சேர்க்கும் படி புளோரிடா மாகாண நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டதைஎதிர்த்தே புஷ் தரப்பில் தற்போது மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அமெரிக்காவின் 43 ஆவது ஜனாதிபதி யார் என்பது தெரிய மேலும் சில நாள்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

(ஒ-8)

# தமிழீழம் - தமிழகம் இணைந்த ஒரு நாட்டை உருவாக்கச் சதி!

## தமிழ் மாநிலக் காங்கிரஸ் குற்றச்சாட்டு

சென்னை, நவ. 24

இந்தியாவிலிருந்து தமிழகத்தைப் பிரித்து சுதந்திரத் தமிழீழத்துடன் இணைத்துத் தமிழர்களுக்கான அகண்ட தமிழ்நாட்டை ஏற்படுத்தச் சதிமுயற்சி நடப்பதாகத் தமிழ் மாநில காங்கிரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

முன்னாள் மத்திய அமைச்சரும், த. மா. காவின் மூத்த தலைவருமான எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியபோது தனது கட்சி சார்பில் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

சத்திய மங்கலம் வனப்பகுதியில் உள்ளவர்களும், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனும் அகண்ட தமிழ்நாடு அமைக்கும் முயற்சி குறித்து முடிவு செய்துள்ளதாகப் பாலசுப்பிரமணியம் மேலும் தெரிவித்துள்ளார்.

வீரப்பனும் தமிழ்நாட்டு விடுதலையைக் கோருவோரும் கொடுத்தனுப்பிய ஓர் அறிக்கையை நெடுமாறன் வாங்கி வந்து பத்திரிகைகளுக்குக் கொடுத்தது ஏன் என்று நெடுமாறன் விளக்கமளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டபாலசுப்பிரமணியம் நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டது முதல் மீட்கப்பட்டது வரை நடைபெற்றது குறித்து நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

விடுதலைப்புலிகளின் ஆதரவாளரான திராவிடர்கழகத் தலைவர் வீரமணிக்கும் த. மா. கா. தலைவர் மூப்பனாருக்கும் இடையே நெருக்கம் உள்ளது பற்றிக்கேட்டபோது வீரமணி விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் அல்லர்; தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாகச் செயற்பட்ட குளத்தூர் மணியைக் கட்சியிலிருந்து நீக்கியதன் மூலம் அவர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் இல்லை என்பதனை நிரூபித்துள்ளார் என்று பாலசுப்பிரமணியம் கூறினார்.

(ஒ)

## தவறிழைத்த மருத்துவருக்குத் தண்டனை

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில், உள்ள எஸ். எம். எஸ். மருத்துவமனையில் சிறு நீரகத்தில் கல் அகற்ற சத்திர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட திருமணம் ஆன இளம் பெண்ணுக்கு சிகிச்சையின் போது தவறுதலாக கர்ப்பப் பையை அகற்றியதற்காக சத்திர சிகிச்சையை மேற்கொண்ட தலைமை மருத்துவர் உள்ளிட்ட குழுவை மாநில அரசு பணியில் இருந்து இடை நிறுத்தியுள்ளது. (ஒ-8)

## தனுஷ்கோடிக்கு தமிழ் அகதிகள் 35 பேர்

மண்டபம், நவ. 24

இலங்கையின் மன்னாரிலிருந்து 12 குடும்பங்களைச் சேர்ந்த 25 தமிழ் அகதிகள் நேற்றுக்காலை தனுஷ்கோடியை அடைந்துள்ளனர்.

இவர்களில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேர் தனுஷ்கோடி அருகில் உள்ள அரிசல் முனைக்கும். 4 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் சேரன் கோட்டைக்கும் வந்து சேர்ந்தனர். (ஒ)

# கொழும்பு ஆஸ்பத்திரிக்குள் வைத்து படை அதிகாரியைக் கொல்லச் சதி

## புலிகளின் ரகசியத் திட்டம் அம்பலமாம்

கொழும்பு, நவ. 24

கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் பணியாற்றும் டாக்டர் ஒருவரை மணம் புரிந்துள்ள உயர் படை அதிகாரி ஒருவரைக் கொல்வதற்காக புலிகளால் வகுக்கப்பட்ட தாக்குதல் திட்டம் தொடர்பான தகவல்கள் கலிசை பொலீஸாருக்குக் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் படை அதிகாரியை கொழும்பு ஆஸ்பத்திரிக்குள் வைத்துக் குண்டுத் தாக்குதல் மூலம் கொல்லப் புலிகள் திட்டம் தீட்டியிருந்தனராம்.

கொழும்புப் பகுதிக்கான புலிகளின் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் மதன் என்பவர் கைது செய்யப்பட்டதை அடுத்து இந்த ரகசியத் திட்டம் தெரியவந்ததாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் கொழும்புக்கு வந்த மதன் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

(ஐ-20)

## மாணவனைக் காணோம்

யாழ்ப்பாணம், நவ. 24

மட்டுவில் கமலாஷினி வித்தியாலய மாணவன் ஒருவனைக் காணவில்லை என்று அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சரசாலை தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த சபாரத்தினம் இளையராஜா (வயது 18) என்ற மாணவரேகாணாமற்போனவராவார்.

தற்பொழுது இடம் பெயர்ந்து தங்கியுள்ள வல்வெட்டித்துறை வீட்டிலிருந்து கடந்த ஞாயிறன்று புறப்பட்டவர் இதுவரை வீடு திரும்பவில்லை என்று அந்தமுறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## ஜி. சீ. ஈ. பரீட்சை அனுமதிஅட்டைகள் வந்தன

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கப்பல்மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் கோட்டக் கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்கப்படும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் நாளை தரம் பிரிக்கப்பட்டு எதிர்வரும் 27ஆம்திகதி பரீட்சார்த்திகளுக்குக் கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்கப்படும்—என்று கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பரீட்சைக்குரிய காகிதாதிகள் மற்றும் வங்கியாளர்களுக்கான பதவி உயர்வுப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களும் கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன. (ஐ-8-10)

## கருத்தரங்கு

ஜி சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான சித்திர பாடக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## பூரான் கடித்துச் சிறுவன் மரணம்

வடமராட்சி, நவ. 24

வெள்ளைப்பூரான் தீண்டிய சிறுவன் ஒருவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானான்.

அல்வாய் கிழக்கு, கலட்டியைச் சேர்ந்த மகேந்திரன் தர்ஷன் (வயது 10) என்ற சிறுவனே மரணமானான்.

கடந்த ஞாயிறன்று பூரானால் கடியுண்ட இச்சிறுவன் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தான்.

(ஐ-173-109)

## 9 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ். கமநல சேவைகள் திணைக்களத்தில் புதிதாக 9 கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் பெயர் விவரமும் நியமனம் செய்யப்பட்டுள்ள பிரதேசங்களும் வருமாறு:-

கே. முரளிதரன்(புத்தூர்), பி. கண்ணகி (வேலணை), வை. வானதி (நல்லூர் தலைமைக் காரியாலயம்), திருமதி ஜே. எம். முரளிதரன் (கைதடி), பி. அஞ்சனாதேவி (தொல்புரம்), எஸ். செல்வகுமார் (கீரிமலை), திருமதி கே. சிவதீபன் (பளை), என். ரவிச்சந்திரன் (அம்பன்), வி. இளமுருகன் (புங்குடுதீவு).

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் வழங்கப்பட்டன எனவும்—

இவர்கள் தமது கடமைகளை புதிய இடங்களில் பொறுப்பேற்றுள்ளதாகவும்—

கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்தார்.

(ம-6)

## அரச திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களின் விவரம் திரட்டு

யாழ். மாவட்டத்திலுள்ள மத்திய அரச திணைக்களங்களில் உள்ள பதவி வெற்றிடங்களின் விவரங்களை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் திணைக்களத் தலைவர்களுக்குப் பணித்துள்ளார்.

மத்திய அரச அலுவலகங்களில் சகல தரங்களிலுமுள்ள பதவிவெற்றிடங்களை சமர்ப்பிக்குமாறு வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு— கிழக்கின் தமிழர் விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் யாழ். அரச அதிபரிடம் கோரியுள்ளதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சேவையின் பெயர், அனுமதிக்கப்பட்ட ஆளணி, தற்போதுள்ளவர்களின்தொகை, வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆகிய தரவுகளே திணைக்களத் தலைவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

(ஐ—5)

## ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ. 24

சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் போட்டிகளையும் கலை நிகழ்வுகளையும் நடத்தத் திட்டமிட்டுள்ளது என்று சங்கத் தலைவர் தெரிவித்தார்.

சர்வதேச ஊனமுற்றோர் தினமான டிசெம்பர் 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஊனமுற்ற ஆண், பெண்களுக்கு இடையிலான முச்சக்கர வண்டி ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளதால் பங்குபற்ற விரும்புவர்கள் தமது பெயர்களை ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள சங்கக் காரியாலயத்தில் முன்கூட்டியே பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்களுக்கான பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்வுகளும் டிசெம்பர் 3 ஆம் திகதி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கக்கட்டடத்தில் நடைபெறும்.

(ஐ-9)

## வடலியடைப்புப் பகுதிக்கு விரைவில் மின் கிடைக்கும்

பண்டத்தரிப்பு வடலியடைப்புப்பகுதிக்கு விரைவில் மின் வழங்கப்பட உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மின்சார சபை மேற்கொண்டு வருகிறது.

ஏனைய பகுதிகளுக்கு மின் வழங்கப்பட்டு வந்தபோதும் வடலியடைப்புப் பிரதேசத்துக்கு நீண்ட காலமாக மின்சாரம் வழங்கப்படவில்லை.

இது குறித்து அப்பகுதி மக்கள் வட்டுக்கோட்டைத் தொகுதி ஈ.பி.டி.பி. அமைப்பாளரும், வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவருமான ந. திரிலோகநாதனிடம் முறையிட்டிருந்தனர். இதனையடுத்து அவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு இது விடயத்தை கொண்டுவந்தார். மின் வழங்கும் பணிகளை உடன் ஆரம்பிக்குமாறு அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார். (ஐ)

## தவறணை அகற்றப்படும்

யாழ்ப்பாணம், நவ. 24

தொல்புரம் பத்தானையம்பதி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்துக்கு அருகில் உள்ள கள்ளுத் தவறணை விரைவில் அங்கிருந்து அகற்றப்படவுள்ளதாக வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் தெரிவித்தார்.

கள்ளுத் தவறணை ஆலயச் சூழலில அமைந்திருப்பதால் ஆலயத்துக்கு வரும் அடியவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தமக்கு முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் — அதனைத் தொடர்ந்து பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினருடன் தொடர்பு கொண்டு கள்ளுத் தவறணையை அங்கிருந்து அகற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

## நெடுந்தீவுப் பகுதி மக்களுடன் டக்ளஸ்தொலைபேசிஉரையாடல்

வடபகுதி அபிவிருத்தி புனர்வாழ்வு மற்றும் வடக்கு — கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாளை சனிக்கிழமை நெடுந்தீவு மக்களுடன் தொலைபேசி மூலம் உரையாடல் ஒன்றை நடத்தவுள்ளார்.

நெடுந்தீவுப் பிரதேச சபையில் இடம்பெறும் இந்நிகழ்வின் போது நெடுந்தீவு மக்களின் அத்தியாவசிய தேவைகள் குறித்து அவர் பொது மக்களிடம் கேட்டறிந்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. [ம-111]

## வாசகர் திருமுகம்

### பாடநூல்கள் உரிய நேரத்தில் வந்து சேருமா?

இந்த ஆண்டு முடிவடையும் தறுவாயிலும். இந்த ஆண்டுக்குரிய பாடப்புத்தகங்கள் இன்னும் வந்துசேரவில்லை.

குடாநாட்டின் இன்றைய சூழ் நிலையில் பாடசாலைகள் அடிக்கடி இழுத்து மூடப்படுகின்றன. ரியூசன்களும் ஒழுங்காக நடப்பதில்லை. நிலைமை இவ்வாறிருக்கையில் பாடப்புத்தகங்களும் வந்து சேரவில்லை எனின் நாம் எப்படி எமது கல்வியைத் தொடர்வது? இது ஏன் எமது கல்வித்திணைக்கள அதிகாரிகளுக்கு தெரியவில்லை.

தங்களுக்குச் சம்பளம் கிடைத்தால் போதும் என்றெண்ணி குடாநாட்டு மாணவரின் நலன்களைக் கருத்திலெடுக்காமல்கல்வி அதிகாரிகள் அசட்டை செய்கிறார்களா?

இந்த ஆண்டு பாடநூல்களே இன்னும் வந்து சேராத நிலையில் அடுத்தஆண்டு ஜி. சி. ஈ. சாதாரண தரப்பரீட்சை எழுதும் மாணவர்களுக்குரிய புத்தகங்கள் அடுத்த ஆண்டு இறுதியில்தான் கிடைக்கும் போலுள்ளது. அதிகாரிகளின் அசமந்தப் போக்குத் தொடர்ந்தால் இந்த நிலைதான் ஏற்படும்.

உரிய நேரத்தில் உரிய பாடநூல்களை கல்வி அமைச்சு அனுப்பி வைக்காவிட்டால் மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியடையமுடியாது. இறுதியில் தொழில் பெறும் வாய்ப்பையும் இழந்து வேறு திசைகளுக்குத் திருப்புவதற்கு மாணவர்கள் தள்ளப்படக்கூடும்.

அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் இந்த இழிய செயல் உரிய முறையில் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

எனவே இத்தகைய நிலை ஏற்படுவதைத் தடுப்பதற்கு முதல் தவணை ஆரம்பத்திலேயே பாடநூல்கள் மாணவர்களுக்குக் கிடைக்கக் கூடியவாறு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கமும் கல்வித் திணைக்களமும் முழுமூச்சுடன் எடுக்க வேண்டும்.

சி. குட்டி

பாதிக்கப்பட்ட மாணவன்.

### மனம் உண்டானால் இடம் உண்டு

இவ்வருடத்தொடக்கத்தில் மாணவர்கள் படிப்பதற்கு தயாரிக்கப்பட்ட புத்தகங்கள் இன்றும் அதாவது 11 மாதங்களாகியும் கிடைக்கவில்லை என்றால் இந்தத் தடங்கலுக்கு யார் பொறுப்பு எதிர் வரும் நாள்களில் இதேபோன்ற தடைகள் ஏற்படாது என்று யாராவது உத்தரவாதம் கொடுக்க முடியுமா?

இந்தக் குளறுபடியை இங்கேயுள்ள புத்தி ஜீவிகளால் எதிர் நோக்கித் தீர்த்து வைக்க முடியாதா?

லட்சக்கணக்கான புத்தகங்களுக்குப் பதிலாக 2அல்லது 3 புத்தகங்களை வரவழைத்து திருநெல்வேலி வளாகத்தில் சம்பந்தப்பட்ட. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களை நியமித்து ஆலோசனை நடத்தி அந்தந்தத் தவணைகளுக்குத்தேவையான முக்கியமானபாடங்களைச் சுருக்கிப் பதிப்பித்து மாணவர்களுக்கு விநியோகிக்க முடியாதா?

'இலவசப்புத்தகங்கள் வடக்கு- கிழக்குக்கு இல்லை பணம் கொடுத்துத்தான் வாங்கிப் படிக்க வேண்டும்' என்று புத்தகங்களை ஆக்கிப் பாருங்கள் நிச்சயமாக மாணவர்கள் வாங்குவார்கள் அவர்களுக்குத் தேவை படிப்பதற்குப் புத்தகம் இலவசமாகக் கிடைக்கவில்லை என்று அவர்கள் உண்ணா விரதம் இருக்கப் போவதில்லை. லைற் இல்லை மண்எண்ணெய் இல்லை என்று அவர்கள் படிக்காமல் இருந்ததில்லை.

இதையாரும் செய்ய முன்வருவார்களா? அது (Copy Right) புத்தகம் மற்றவர் கைபடக்கூடாது. கூட்டிக் கழித்து பெருக்கிப் பிரித்து எதுவும் ஆகாது என்று சொல்லியாரும் தட்டிக்கழிப்பார்களா? அல்லது காற்றுக் கோளாறினால் கப்பல் இல்லை. கப்பல் கோளாறினால் புத்தகம் இல்லை. புத்தகக் கோளாறினால் படிப்பிக்க முடியவில்லை என்று சொல்லி தப்பித்துக் கொள்ளப்பார்ப்பார்களா?.

இந்தக் கோளாறுகள் சோதனை நாள்களில் ஏற்படுவதில்லையா? கேள்வித் தாளும், விடைத் தாளும் எவ்வாறு கடல் கடந்து வந்து போகின்றன.

ஆசிரிய உலகத்தால் எதுவும் செய்ய முடியாது என்று நான் நம்பமாட்டேன். மனம் உண்டானால் இடமுண்டு.

அக்கறையுள்ள தந்தை

யாழ்ப்பாணம்.

# தொண்டர் ஆசிரியர் நியமனத்தை அரசியல்மயப்படுத்த வேண்டாம்!

## கல்வி அமைச்சருக்கு சம்பந்தன் கடிதம்

திருகோணமலை,நவ.24

வடக்கு - கிழக்கில் தொண்டர் ஆசிரியர் நியமனங்களை அரசியல் மயப்படுத்த அனுமதி வழங்க வேண்டாம்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகமும், திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு கோரியுள்ளார்.

திருகோணமலை மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் தொடர்ச்சியாக நடத்தி வந்த சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் குறித்து கல்வி அமைச்சருக்கு அனுப்பிவைத்த கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

திருகோணமலை மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பான பிரச்சினையை நாடாளுமன்றத்தில் நான் எழுப்பி ஒன்பது மாதங்கள் கடந்து விட்டன. எனவே இந்த விடயத்தை இனியும் காலம் தாழ்த்தாது விரைவாக நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதே வேளை கோரப்பட்ட தகுதிப்படி திறமையின் அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

தேவைப்படும் அடிப்படைத் தகுதிகள் மற்றும் பாட வாரியாக பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப மேலும் தொண்டர் ஆசிரியர்கள் சிலருக்கு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று மாகாண அதிகாரிகள் எனக்கு அறிவித்துள்ளார்கள். எனவே அரசியல் செல்வாக்குக்கு உட்படாது தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-7)

# கான்ஸ்டபிளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் ஒரு கான்ஸ்டபிள் உயிரிழக்க, காயமடைந்த மற்றைய கான்ஸ்டபிள் வீதிக்கு ஓடிவந்து திருப்பிச் சுட்டதாகக் கூறப்படும் சம்பவத்தில் பதியில் காருக்குள் இருந்த முரளிதரன் என்பவர் உயிரிழந்ததும் - தெரிந்தவையே.

சம்பந்தப்பட்ட முரளிதரனுடன் அன்று அந்த ஹோட்டலில் உணவருந்திய ஐவரை யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்.

பொலீஸ் கான்ஸ்டபிள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு பொறுப்பான சந்தேகநபர் உயிரிழந்த முரளிதரன் என்றும்-

புலன்விசாரணைகளுக்காக அவருடன் அன்று ஹோட்டலுக்கு வந்த ஐவரையும் விசாரணை முடியும்வரை விளக்கமறியலில் வைக்கும்படியும்-

பொலீஸ் தரப்பில் கோரப்பட்டது.

ஆனால் நேற்று முன்தினம் விசாரணைகளை நடத்திய நீதிவான் ஐவரையும் விளக்கமறியலில் வைக்கும்படி விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்தார்.

ஐவரின் வாக்குமூலங்களையும் தனித்தனியாக பதிவுசெய்த நீதிவான அவர்களைத் தலா 25 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதித்தார்.

முரளிதரனைச் சுட்டதாகக் கூறப்படும் பொலீஸ் கான்ஸ்டபிளை கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட கான்ஸ்டபிள் காயமடைந்த நிலையில் கொழும்பு பொலீஸ் நிலைய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாகப் பொலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து -

சம்பந்தப்பட்ட கான்ஸ்டபிளை கைதுசெய்வதற்கான உத்தரவை பொலீஸாருக்கு வழங்கும்படி கோரும கட்டளையை கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றுக்கு உடன் அனுப்பி வைக்குமாறு யாழ்நீதிவான் பணித்தார்.

பொலீஸார் பல நெருக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும் கூட, தமது கையில் உள்ள ஆயுதங்களைப் பயன்படுத்தும்போது மிக நிதானத்துடனும் அவதானத்துடனும் செயற்படவேண்டும் என்பதை அவர்களுக்கு அறிவுறுத்துமாறு கோரும் ஆலோசனை அடங்கிய உத்தரவு ஒன்று பொலீஸ்மா அதிபருக்கு அனுப்பிவைக்கும்படியும் யாழ்.நீதிவான் பணித்தார்.

மேற்படி சம்பவத்தில் உயிரிழந்த முரளிதரன், சம்பவ சமயம் கறுப்பு நிற நீளக்காற்சட்டையும் பச்சை கோடுகளுடன் கூடிய மஞ்சள் ரீசேட்டும் அணிந்திருந்ததாகவும் -

மரண பரிசோதனைகளின்போது அது தங்களால் எடுக்கப்பட்டதாகவும் -

பொலீஸ் அதிகாரியினால் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் சாட்சியான யாழ்பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி வெளியிட்ட அந்தத் தகவலை நீதிவான் ஏற்க மறுத்துவிட்டார்.

தமது சகோதர நீதிவானின் துணைவியார் திருமதி ஏகநாதன் யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்ததால் சம்பவ தினம் மாலையில் அவரைப் பார்க்க தான் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குச் சென்றதாகவும் -

அப்போது மேற்படிச் சம்பவம் குறித்து தம்முடன் உரையாடிய பொலீஸ் அத்தியட்சகர் அருகில் இருந்த வெள்ளை மொரிஸ் ஒக்ஸ்போட் காரின் பின் கதவைத் திறந்து சீலையால் மூடப்பட்டிருந்த சடலம் ஒன்றைத் தமக்குக் காட்டியதாகவும்-

பிடரியடியில் துப்பாக்கிச் சன்னத்தின் துளை காயத்துடன் காணப்பட்ட அந்த நபர் வெள்ளைச் சேட் அணிந்திருந்ததாகவும் -

எனவே இப்போது அவரின் உடலில் இருந்து பிரேத பரிசோதனையின்போது மஞ்சள் நிற மேலங்கி எடுக்கப்பட்டதாகப் பொலீஸ் தரப்பினால் கூறப்பட்ட சாட்சியத்தை தன்னால் ஏற்க முடியாது இருப்பதாகவும் -

நீதிவான் தெரிவித்து, தமது அந்த அவதானங்களைப் பதிவுசெய்யும்படி பணித்தார்.

இந்த அடிப்படையில் இந்தச் சம்பவம் பற்றிய உண்மை நிலையை அறியும் பொருட்டுப் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்ட சந்தேகநபர்களின் வாக்குமூலங்களை நேரடியாகப் பதிவுசெய்யத் தீர்மானிப்பதாக நீதிவான் அறிவித்தார்.

சந்தேக நபர்களின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்த நீதிவான் -

அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி பொலீஸ் தரப்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்து, அவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்தார். (உ-இ-3-5-6-10)

### பல்கலைக்கழகத்தில் விசாரணை

யாழ்.பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு ஊழியர்களுக்குக் காலணி கொள்வனவு செய்ததில் ஊழல் மற்றும் மோசடி இடம்பெற்றதாகச் சுமார் பத்து ஊழியர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

பீடாதிபதி ஒருவர் தலைமையிலான இந்த விசாரணைக்குழு நேற்று தனது விசாரணையை ஆரம்பித்தது என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5-6)

# களஞ்சியப் பொறுப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினசரி காலையில் யாழ்பொலீஸ நிலையத்தில் ஆஜராகிக் கையொப்பம் இடவேண்டும் என்ற கட்டளையுடனும் -

நீதிமன்ற அனுமதியின்றி யாழ்.குடாநாட்டைவிட்டு வெளியேறக் கூடாது என்ற நிபந்தனையுடனும்-

இவருக்கு யாழ்.மாஜிஸ்திரேட் நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியது.

ஆள் பிணைக்கு ஒப்பமிடும் அதிகாரிகள் குடாநாட்டை விட்டுத் தாம் வெளியேற வேண்டிய அவசியம் ஏற்பட்டால், தாம் வழங்கிய ஆள் பிணையை நீக்கி, வேறு உயர் அதிகாரியைக் கொண்டு சம்பந்தப்பட்டவருக்கு ஆள் பிணை வழங்கி, அது குறித்து மாஜிஸ்திரேட் நீதிமன்றுக்கு அறிவித்து, நீதிமன்றம் திருப்திப்பட்ட பின்னரே குடாநாட்டைவிட்டு வெளியேறலாம் என்றும் நீதிமன்றம் நேற்று தனது பிணை அனுமதி உத்தரவில் தெரிவித்தது.

இந்த விடயம் நேற்று நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது-

இந்த விவகாரம் தொடர்பான 49 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு தங்களுக்குப் போதுமான தகவல் கிடைக்கவில்லை என்றும்-

சம்பந்தப்பட்ட விடயம் குறித்து கணக்காய்வு விசாரணை ஒன்றைச் செய்யுமாறு யாழ்.அரச அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டால், அத்தகைய கணக்காய்வு அறிக்கை கிடைத்த பின்னரே அதன் அடிப்படையில் பொலீஸ் விசாரணையை மேற்கொள்ள முடியும் என்றும்-

பொலீஸார் தரப்பில் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் பொலீஸ் தரப்பின் இந்த நிலைப்பாட்டுக்கு நீதிவான் இ.த. விக்னராஜா கண்டனம் தெரிவித்தார்

"இது விடயத்தில் பொலீஸாரின் அசண்டையீனத்தையிட்டு இந் நீதிமன்றம் பாராமுகமாக இருக்க முடியாது.

"இந்த விடயம் பொது நன்மையின் மேம்பாடு கருதி எடுத்த நடவடிக்கை என்றும், இது ஒரு பாரிய தொகை சம்பந்தமானது என்றும். இது ஏழை மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் விடயமாக உள்ளது என்றும் தெரிய வருவதாக வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி தமது பிணை மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

"இந்த விடயத்தை விசாரணை செய்து குற்றவாளிகளை இனங்காண்பதற்கு குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவையின் 11ஆம் பிரிவின் கீழ் பொலீஸார் விசாரணை நடத்த வேண்டும் என்று - மேல்நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுக்கு அமைய - யாழ்.பொலீஸ் பொறுப்பதிகாரிக்குப் பணிக்கின்றேன்.

"இச் செயல் ஒரு குற்றவியல் செயல் இதனைக் கணக்காய்வு செய்யும்படி யாழ்.அரச அதிபருக்கு அறிவிப்பதன் மூலம் எதுவித பயனும் கிட்டாது என்று இந்த நீதிமன்றம் கருதுகின்றது. எனவே இந்த மோசடிக்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலீஸாரைப் பணிக்கின்றேன்.

"அத்தோடு இந்த உத்தரவுகளின பிரதிகளை பொலீஸ்மா அதிபருக்கும் சட்டமா அதிபருக்கும் அனுப்பும்படி பணிக்கப்படுகின்றது."

- இப்படி நீதிவான் நேற்று தான் விடுத்த உத்தரவில் தெரிவித்துள்ளார். (உ-5-6)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

மானிப்பாய் வை. எம். சீ. ஏயின்
நிர்வாகச் செயலாளரும்
பல்வேறுபட்ட அமைப்புக்களின்
சமூகசேவைப் பங்களிப்பாளருமான

**லயன்**

**எஸ்.ஜே.செல்வராஜா**

(முதலாம் குறுக்கு, இணுவில் வீதி,
மானிப்பாய்)



அவர்கள் சமாதானநீதிவானாக நியமிக்கப்பட்டதை பாராட்டுவதோடு அவரின் சமூகப் பணி அர்ப்பணிப்புகளும் செய்திறனும் வளர்ந்தோங்க வாழ்த்துகிறோம்.

*வை.எம்.சீ.ஏ.*
**மானிப்பாய்.**

(80844)



# கண்ணீர் அஞ்சலி

யா/கப்பூது ஏகாம்பரம் வித்தியாலய அதிபர்
**திருமதி ஜெயமலர் ஜெயக்குமாரன் அவர்களின்**
*அன்பு மாமனார்*

## அமரர் அருணாச்சலம் ஆறுமுகம்

(இளைப்பாறிய முன்னாள் உப அதிபர் -
யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)

அவர்கள் 23.11.2000 அன்று இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

*ஆசிரியர்கள், மாணவர்கள்.*

**யா/கப்பூது ஏகாம்பரம் வித்தியாலயம்,**
**கப்பூது.** (C/13962)



# மரண அறிவித்தல்கள்

## நரசிங்கம் முத்துக்குமாரு

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்தவரும் கொழும்பில் வசித்தவருமாகிய நரசிங்கம் முத்துக்குமாரு(இளைப்பாறிய பிரதம இலிகிதர், கொழும்பு கொமர்ஷல் கம்பனி) 22.11.2000 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் வ.நரசிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் புதல்வனும், கரணவாயைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையா தம்பதிகளின் மருமகனும் சௌபாக்கியவதியின் (இளைப்பாறிய ஆசிரியை, கொழும்பு) அன்புக் கணவரும், புவனேஸ்வரி, சிவபாக்கியம், தர்மவரதன்(London) காலஞ்சென்ற மகேஸ்வரி, மகாலட்சுமி(Upcot), சரஸ்வதி(Canada), சிவஞானம் (London) ஆகியோரின் அன்புச்சகோதரனும் , காலஞ்சென்ற டாக்டர் திருச்செல்வம், பரமேஸ்வரி(London), சங்கரப்பிள்ளை (Upcot), பாலசுப்பிரமணியம் (Canada), செல்வராணி(London), ரங்கநாயகி, காலஞ்சென்ற சந்திராதேவி, மங்களநாயகி, தெய்வேந்திரன், நாகேந்திரன், கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் திருமதிகள் சிவகாமி தர்மபாலா (ஆசிரியை), சிவகௌரி அற்புதநாதன்(ஆசிரியை,கொழும்பு), சிவஅம்பிகை சிவமூர்த்தி (Canada), சிவகுமரன்(London), சிவஆனந்தி ரவிராஜன் (Australia), சிவரூபி சண்முகதாசன்(Australia), சிவஜோதி கணநாதன்(Colombo), தயாளினி ஆதவன்(London), சுபாசினி சடகோபன்(Germany), ஜனனி சிவானந்தன் (London), சரவணபாலன்(Canada), பாலசரஸ்வதி(Canada) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரியா(London), பிரஸாதன்(London) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.11.2000 ஞாயிறு காலை 10.00மணியளவில் வெள்ளவத்தையில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று ஜாவத்தை மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சிவகாமி தர்மபாலா
(தற்போது கொழும்பில்)
*இளவாலை வடக்கு,*
*இளவாலை.*

*11/2, 55ஆம் ஒழுங்கை,*
*வெள்ளவத்தை.*
T.P 594601. (80845)

## கந்தையா தனபாலசிங்கம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா தனபாலசிங்கம் நேற்றுமுன்தினம் (22.11.2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், நிர்மலன், ஞானேஸ்வரி, மைதிலி (லண்டன்), சுமித்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பரமானந்தபூபதியின் அன்புத் தம்பியும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளையின் (இன்ஸ்பெக்டர்) மைத்துனரும், கோகிலவாணி, பாலமுரளி, முரளீதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிந்துஜன், திவிஜா, சூனிஜா, வசந்தினி, பிரசாந், நிரோஜன், பிரதீப் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.11.2000 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்டர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**தகவல்:**
ந.பாலமுரளி (மருமகன்)

*கட்டைப்பாலி லேன்,*
*மானிப்பாய்.*
(80840)

## பொன்னம்பலம் வள்ளிப்பிள்ளை

(வாரிவளவு, காரைநகர்)

அன்னாரது இறுதிக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் நேற்று (23.11.2000) வியாழக்கிழமை நடைபெறவில்லை. இவரது இறுதிக் கிரியைகள் இன்று (24.11.2000) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கோம்பையன்மணல் இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம். *(இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.)*

*826/10 K.K.S வீதி,*
*தட்டாதெருச் சந்தி,*
*யாழ்ப்பாணம்.*
(80846)

தகவல்
பொ.சிவப்பிரகாசம் (மகன்)
(S.P.பிரகாஸ், சுன்னாகம்)

## கந்தையா அன்ரன் செல்வராஜா

(முன்னாள் யா.மா.ச. களஞ்சியப் பொறுப்பாளர் - S.K)

யாழ்ப்பாணம், குருசோ வீதியைப் பிறப்பிடமாகவும்,பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் தற்போது நாவாந்துறையில் வசித்தவருமாகிய கந்தையா அன்ரன் செல்வராஜா அவர்கள் நேற்று (23.11.2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் யூலிஆனின் (யூலிஆன் 'மிஸ்') அன்புக் கணவரும கிசோக்குமாரின் (ஆண்டு - 8 மாணவன், புனித பத்திரிசியார் கல்லூரி) அன்புத் தகப்பனும் டொறின் கிரேஸியின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (25.11.2000) சனிக்கிழமை புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் காலை 6.30 மணிக்கு (புதிய நேரம்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*இல.80, கடற்கரை வீதி,*
*நாவாந்துறை,*
*யாழ்ப்பாணம்.*
(80847)

தகவல்
யூலி ஆன் (மனைவி)
கிசோக்குமார் (மகன்)

### மூதூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
11), மகில் நிஷார் (வயது 9)ஆகிய இருவருமே உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த மாணவர்களில் 8 பேர் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பூர்ப் பகுதியில் இருந்து நேற்றுக் காலை 8 மணியளவில் விடுதலைப்புலிகள் ஏவிய ஷெல்களே மூதூர் நகரப்பகுதியில் வீழ்ந்து வெடித்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

ஷெல் வீச்சை அடுத்து மூதூர் நகரப் பகுதியில் நேற்று முழுநாளும பதற்றம் நிலவியது. (ஐ-7-8)

### உலக வங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இயங்கும் பிரதான தொழிற்சங்கங்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தன. ஒரு கட்டத்தில் ஆர்ப்பாட்டக் காரர்கள் கொள்ளுப்பிட்டி டி.எம்.சி.சி கட்டடத்தில் அமைந்துள்ள உலக வங்கி அலுவலகத்துக்குள் நுழைய முயன்றபோது பொலீஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து அகன்று சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் கொள்ளுப்பிட்டிச் சந்தியில் கோஷங்களை எழுப்பியவாறு தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-7-4)

### இன்று ஒரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கள் இன்று வெள்ளிக்கிழமை முதல் இடம்பெறும் என்று வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை அதிகாரி எஸ்.குகராஜன் தெரிவித்தார்.

வெளியிடங்களில் இருந்து வந்தவர்கள், வெளிநாட்டவர், நோயாளர்கள், அரச அலுவலர்கள் ஆகியோரும், இன்று வருமாறு திகதி குறிப்பிட்டு அழைக்கப்பட்டோரும் இன்று தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் -

514 ஆவது பிரிகேட் பிரிவைச் சேர்ந்தவர்களும் இன்று பிற்பகல் 2 மணி முதல் 4 மணிவரை பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும்- அவர் தெரிவித்தார். (ஐ)

### நாடாளுமன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றோல் போன்ற எரிபொருள்களை கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

* வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கு தாராளமாக மண்ணெண்ணெய் அனுப்ப வேண்டும்.

- மேற்கண்ட மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்தே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இந்தப் போராட்டத்தை மேற்கொள்ள இருக்கின்றனர்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான விவாதம் எதிர்வரும் 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம் பெறும் சமயமே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் மேற்கொண்டு வருகிறார்.

இந்தப் போராட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக் கொள்வதற்காக அக்கட்சிகளின் தலைவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் மகேஸ்வரன் தெரிவித்தார். (உ-3)

# கொழும்பு வீதிகளில் கண்ணிகளை புதைக்கப் புலிகள் திட்டமாம்!

## தடுப்பு நடவடிக்கை தீவிரம்

கொழும்பு,நவ.24

கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வீதிகளில் கண்ணிவெடிகளைப் புதைத்து வெடிக்கச் செய்வதன் மூலம் முக்கிய பிரமுகர்களைக் கொல்ல புலிகள் திட்டமிட்டிருப்பது பற்றிய தகவல் கிடைத்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனை அடுத்து பிரதான வீதிகளிலும், பாலங்கள் அமைந்துள்ள பகுதிகளிலும் பொலீஸ் கண்காணிப்பு தீவிரமாக்கப்பட்டுள்ளது.

வீதிகளில் ஏதேனும் தேவையின் நிமித்தம் அகழ்வு வேலைகளைச் செய்வதாயின் பாதுகாப்புத் தரப்பின் அனுமதி பெற்று, பொலீஸாரின் கண்காணிப்பின் கீழேயே அப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று பொலீஸ்மா அதிபர் உத்தரவிட்டிருக்கின்றார். (ஐ-20)

### நோர்வே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியாக தாங்கள் இதுவரை எடுத்த நடவடிக்கைகளை இந்தியத் தலைவர்களுக்கு எடுத்துரைத்த சமாதானக் குழுவினர், அவை தொடர்பான இந்தியத் தரப்பின் பிரதிபலிப்பையும் கேட்டறிந்து கொண்டனர்.

சமாதானத்துக்கான இந்த முயற்சிகளின் போது, இந்தியாவின் நியாயமான நலன்கள் அனைத்தும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்று நோர்வே குழுவினர் இந்தியத் தரப்புக்கு உறுதியளித்ததாகத் தெரிகின்றது.

இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் தம் மூலமாக எந்த நிபந்தனையையும் விதிக்கவில்லை என்றும்-

ஆனால் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை அவசியம் என்பதை விடுதலைப் புலிகளின் தலைவர் தங்களிடம் வலியுறுத்தினார் என்றும் -

தூதுக் குழுவினர் இந்தியத் தரப்புக்குத் தெரிவித்ததாகக் கூறப்பட்டது. (உ-7-8)

### விசாரணைக் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்றம் நேற்றுக் கூடியது.

அனுதாபப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதும் பண்டாரவளைத் தடுப்பு முகாம் படுகொலை தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என அகில இலங்கைத தமிழ்க் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி பிரேரணை ஒன்றை முன்மொழிந்தார்.

ஐ.தே.கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பியான டி.பி.தேவராஜ் அதனை வழிமொழிந்ததைத் தொடர்ந்து பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க விசாரணைக்குழு அமையும் முறை பற்றி சபையில் எடுத்துக் கூறினார். (ஐ-7)

### ஜி.சி.ஈ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தார்.

யாழ். மாவட்ட மாணவர்களின் பெறுபேறுகள் அடுத்தவார நடுப் பகுதியில் இங்கு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடங்களில் இந்தப் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கு நீண்டகாலம் எடுத்தது. இம்முறை முடிவுகள் மூன்று மாதங்களில் வெளியாகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

### அப்பாவி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புரம் பகுதி நேற்று சோகமயமாகக் காணப்பட்டது. நேற்றுக் காலை அப்பகுதியில் கூடிய கிராம மக்கள் இந்தச் சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். அச்சமயம் அங்கு வந்த படையினர் அவர்களைக் கலைந்து செல்லுமாறு உத்தரவிட்டதாகக் கூறப்படுகின்றது. ஆனால் பொதுமக்கள் அங்கிருந்து வெளியேற மறுத்துத் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனை அடுத்து சுமார் 20 இளைஞர்கள் வரை படையினரால் கைதுசெய்யப்பட்டு குச்சவெளிப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது.

அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்ட இச் சம்பவம் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இ.சம்பந்தன் ஜனாதிபதியின் கவனத்துக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரிடமும் கேட்டிருக்கிறார். (ஐ-7-8)

### தீர்வுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்புக்கு விஜயம் செய்துள்ள அவர் நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அவர் பத்திரிகையாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:-

இது சமாதானத்தை உருவாக்குவதற்கான நேரம்; போருக்கான நேரம் அல்ல.அரசியல் தலைவர்கள் எழுந்து நின்று பொறுப்புடன் செயற்படவேண்டிய காலம் இது.

விடுதலைப்புலிகள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் தீர்வு காண்பதற்கு அதிக அவசரத்தையும் ஈடுபாட்டையும் காட்டவேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன். நாங்கள் இந்தியாவுடனும் நோர்வேயுடனும் நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ளோம். பேச்சு மூலம் தீர்வு காண்பதைத் தவிர இலங்கைக்கு வேறு வழி எதுவும் இல்லை என்று அமைச்சர் ஹெய்ன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளைத் தடை செய்வது பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோது-

அடுத்த ஆண்டு நடைமுறைப் படுத்தப்படவுள்ள உத்தேச பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகளையும் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்ப்பது குறித்து பிரிட்டன் ஆராய்ந்து வருகிறது - என்று அவர் தெரிவித்தார்.

அமைச்சர் ஹெய்ன் நேற்றுக் காலை நாடாளுமன்ற அமர்வுக்குச் சமுகமளித்து அங்கு நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்.

நேற்று மாலை பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுடன் அவர் பேச்சு நடத்தினார். (ஐ-7-8)


வெகுமதி ரூபா 10,000/-

EBK 2000 SRI RAM HONDA GENERATOR
(இல. 8166966) களவாடப்பட்டுள்ளது. இதுபற்றி தகவல் தருபவர்களுக்கு அல்லது கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு வெகுமதி ரூபா 10,000 வழங்கப்படும்.

M. அருளப்பு,
ஏழாலை மத்தி,
ஏழாலை.

(80781)

NEW SCIENCE COLLEGE
JAFFNA
இணைந்த கணிதம்
A/L 2002 எறியம்
ஆரம்பம் : 25.11.2000
(சனி, ஞாயிறு 8.00 a.m)
A. பத்மநாதன்
(80745)

IIS இன் கணனிக்கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2001
5000 மாணவர்களுக்கு



- பல்கலைக்கழக, தொழில்நுட்பக்கல்லூரி, பாடசாலை மாணவர்களுக்கு ஏற்றவகையில் நன்கு திட்டமிடப்பட்ட பாடவிதானங்களைக் கொண்டது.
- இப் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகும் ஓர் அரிய சந்தர்ப்பம்.
- ஆசிரியர்கள், அலுவலகர்களின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சிநெறிகளைக் கொண்டது.

விண்ணப்பப்படிவங்களை நீங்கள் IIS அலுவலகங்களிலும், உங்கள் பாடசாலைகளிலும், பிரபல தனியார் கல்வி நிறுவனங்களிலும், அருகில் உள்ள பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.



வருடம் ஒரு முறை மட்டுமே கிடைக்கும் இவ் வரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்

"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

மேலதிக விபரங்களுக்கு....

Institute of Informatics Studies (IIS)
(பிரித்தானிய IMIS நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)

தலைமை அலுவலகம் :
IIS. 100, மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021-2831 E-mail : iis@sltnet.lk

கிளை நிறுவனம் :
IIS, நெல்லியடி, கரவெட்டி.

DCS
கணனிக் கற்கை நெறிகளுக்கான
2001/2002
கல்வியாண்டுக்குரிய
சிறப்பான
புலமைப்பரிசில்
திட்டத்தை மிக
விரைவில்
எதிர்பாருங்கள்.....!


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.